விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 மாசி 22 வெள்ளிக்கிழமை (06.03.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 077

SATS-TECH ENGINEERS



NEW PACKAGES & RENEWAL
CALL:- 222 5908 / 222 8812

# போர் நிறுத்தத்தை வலியுறுத்தி ஜெயலலிதா உண்ணாவிரதம்

## நிதி திரட்டவும் நடவடிக்கை



(சென்னை)

இலங்கைத் தமிழர்கள் படுகொலையைக் கண்டித்தும் போர் நிறுத்தத்தை வலியுறுத்தியும் அ.தி.மு.க. சார்பில் எதிர்வரும் 10 ஆம் திகதி தமிழகம் முழுவதும் உண்ணாவிரதம் நடைபெறும் என்றும் சென்னையில் தனது தலைமையில் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறும் என்றும் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்பு சந்தியிலிருந்து கடற்கரையூடாக படையினர் நகர்வு

### என்கிறார் இராணுவப் பேச்சாளர்

(கொழும்பு)

புதுக்குடியிருப்பு சந்தியை கைப்பற்றி அங்கு நிலைகொண்டுள்ள படையினர் தற்போது அங்கிருந்து 4 கிலோமீற்றர் கிழக்குப் பகுதியில் சிக்குண்டுள்ள பொதுமக்களை மீட்பதற்காக கிழக்குக் கடற்கரையினூடாக முன்நகர்வு முயற்சியினை மேற்கொண்டு வருகின்றனர்.

இதன்போது படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் அப்பகுதிகளில் கடும் மோதல்கள் இடம்பெற்று வருகின்றன.

இதில் படைத்தரப்புக்கு சிறிய அளவில் சேதங்கள் ஏற்பட்டுள்ளதுடன் புலிகள் இயக்கம் பாரிய இழப்புகளுக்கு முகம் கொடுத்துள்ளதாக படைத்தரப்பு தெரிவிக்கின்றது.

தற்போது சுமார் 45 சதுர கிலோமீற்றர் பரப்பளவுக்குள் முடக்கப்பட்டுள்ள புலிகள் இயக்கத்தினர் (12ஆம் பக்கம் பார்க்க)

## லாகூர் தாக்குதலுக்குத் தொடர்பில்லை தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவிப்பு

### ரைம்ஸ் ஒப் இந்தியாவில் செய்தி

(புதுடில்லி)

பாகிஸ்தான் லாகூரில் இலங்கை கிரிக்கெட் அணியின் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கும் தமக்கும் எவ்வித தொடர்புகளும் இல்லையென தமிழீழ விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர் என ரைம்ஸ் ஒப் இந்தியா செய்தி வெளியிட்டுள்ளது.

அவுஸ்திரேலிய விசேட ஒலிபரப்புச் சேவைக்கு கருத்துரைத்த தமிழீழ விடுதலைப் புலிகளின் பேச்சாளரான திலீபன் இந்த மறுப்பை வெளியிட்டுள்ளார் எனவும் ரைம்ஸ் ஒப் இந்தியா கூறியுள்ளது.

அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது, இந்தத் தாக்குதலுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தொடர்புகள் இருக்கலாமா என (12ஆம் பக்கம் பார்க்க)

## கிரிக்கெட் வீரர்களை புலிகள் கடத்தி தாக்குதலை நிறுத்த முயன்றிருக்கலாம்

### இப்படியும் அரசுக்கு சந்தேகம்

(கொழும்பு)

பாகிஸ்தானில் இலங்கைக் கிரிக்கெட் வீரர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலுடன் விடுதலைப் புலிகளுக்குத் தொடர்பு இருக்கலாம் என சந்தேகம் எழுந்துள்ளது.

விடுதலைப் புலிகள், பாகிஸ்தானில் எமது கிரிக்கெட் வீரர்களை பணயக் கைதிகளாக வைத்து, வடக்கில் மேற்கொள்ளப்படும் தாக்குதல்களை நிறுத்த முயற்சித்திருக்கலாம் என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கலாநிதி பாலித கோஹன தெரிவித்தார்.

பாகிஸ்தானில் இடம்பெற்ற இலங்கை கிரிக்கெட் வீரர்கள் (12ஆம் பக்கம் பார்க்க)

## இந்.இராணுவ மருத்துவக்குழு அடுத்த வாரம் இலங்கை வருகிறது

(புதுடில்லி)

இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்டுள்ள அப்பாவித் தமிழர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக இராணுவ மருத்துவக் குழுவை இந்திய அரசு அனுப்பி வைக்க முடிவு செய்துள்ளது.

மருத்துவர்கள் மற்றும் ஊழியர்கள் 50 பேர் அடங்கிய இந்தக் குழு அடுத்தவாரம் இரண்டு விமானங்களில் மருந்து மற்றும் மருத்துவ சாதனங்களுடன் கொழும்பு செல்கிறது. (12ஆம் பக்கம் பார்க்க)

## மாத்தளனில் ஷெல் தாக்குதலில் ஐ.சி.ஆர்.சி. பணியாளர் பலி

### பணிகள் தொடரும் என்கிறார் பேச்சாளர்

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்டம் வலைஞர்மடம் பகுதியில் புதன்கிழமை பிற்பகல் இடம்பெற்ற எறிகணைத் தாக்குதலில் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவின் உள்ளூர் பணியாளராகிய அளவெட்டியைச் சேர்ந்த வடிவேல் விஜயகுமார் என்பவர் உயிரிழந்துள்ளதாக சர்வதேச செஞ்சிலுவைக் குழுவின் பேச்சாளர் சரசி விஜேரத்ன தெரிவித்தார்.

இந்த எறிகணைத் தாக்குதலை யார் நடத்தியது என்பது பற்றிய விபரங்களை அவர் வெளியிடவில்லை. ஆயினும் எறிகணைக் குண்டு ஒன்றின் (12ஆம் பக்கம் பார்க்க)

## ஆசிரிய உதவியாளர்களாக தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம்

### அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

கஷ்டப் பிரதேசங்களில் தொண்டர் ஆசிரியர்களாக கடமை புரிபவர்களுக்கு ஆசிரிய உதவியாளர்களாக நியமிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்த தெரிவித்தார்.

இதற்கமைவாக கஷ்டப் பிரதேசங்களில் தொண்டர் ஆசிரியராக கடமை புரிந்து 2007 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி மூன்று வருடங்களை பூர்த்தி செய்தவர்களில் 4 ஆயிரத்து 700 பேர் உதவி ஆசிரியர்களாக நியமிக்கப்படுவர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதற்காக தம்மால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தை அமைச்சரவை நேற்று முன்தினம் அங்கீகாரம் அளித்துள்ளதாக கல்வி அமைச்சர் தெரிவித்தார்.

இவ்வாறு உதவி ஆசிரியர்களாக நியமிக்கப்படுபவர்களுக்கு 5 வருடப் பயிற்சி வழங்கப்படுமெனவும் அவர் கூறினார். இதேவேளை வடக்கு மாகாணத்தில் நியமனம் வழங்குவதற்காக நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட தொண்டர் ஆசிரியர்களில் 2005ஆம் ஆண்டு டிசம்பர் (12ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாண நகரை ஒருங்கிணைக்க பாதுகாப்புக் கட்டமைப்பு அமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரத்தின் பாதுகாப்பு ஒருங்கிணைப்பு சம்பந்தமாக ஆராய இராணுவத்தின் தலைமையில் அரசியல் கட்சிகள் பொலிஸார் உள்ளடங்கிய பாதுகாப்புக் கட்டமைப்பு ஒன்று நேற்று உருவாக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக யாழ்ப்பாணத்தில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளின் முக்கியஸ்தர்கள், பொலிஸார் ஆகியோர் கலந்து கொண்ட கூட்டத்திற்கு யாழ்.நகர வட்டார படைத்தளபதி தலைமை தாங்கினார்

இக் கூட்டம் யாழ்.நகரில் பொதுமக்களினதும் வணிகர்களினதும் பாதுகாப்பை உறுதி செய்வதற்காகவும், யாழ்.நகரில் மக்களும் வியாபாரிகளும் எதிர்நோக்குகின்ற அனைத்து பிரச்சினைகள் (12ஆம் பக்கம் பார்க்க)



சிறுவர்களை மீட்போம்

சிறுவர் ஆட்சேர்ப்பை நிறுத்து

போருக்கு சிறுவர்களை ஆட்சேர்ப்பது இலங்கை மற்றும் சர்வதேச சட்டங்களுக்கு முரணானது. இந்தப் பிரச்சினையில் இலங்கை அரசாங்கம் பூரண எதிர்ப்புக் கொள்கையைக் கடைப்பிடிக்கிறது.

புனர்வாழ்வு ஆணையாளர் தலைமையதிபதி செயலகம்

unicef

# முல்லைத்தீவிலிருந்து 8ஆம் கட்டமாக திருமலைக்கு அழைத்து வரப்பட்டோர்

(திருகோணமலை)

முல்லைத்தீவிலிருந்து சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தினரால் நோயாளர்கள் மற்றும் காயமுற்றவர்கள் உட்பட 357 பேர் நேற்று முன்தினம் நள்ளிரவு கப்பல் மூலம் திருகோணமலைக்கு அழைத்துவரப்பட்டுள்ளனர்.

கடந்த மாதம் 11ஆம் திகதி முதல் கப்பல் மூலம் நோயாளர்கள் மற்றும் காயமடைந்தவர்களை அழைத்து வரும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. நேற்று முன்தினம் இரவு அழைத்துவரப்பட்ட 357 பேரும் 8ஆவது தொகுதியினர் என திருகோணமலை வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்களில் 87 பேர் காயமடைந்தவர்கள், 57 பேர் நோயாளர்கள்,2 பேர் கர்ப்பிணித்தாய்மார்,162 பேர் இவர்களுக்கான உதவியாளர்கள் என இது தொடர்பாக தகவல்கள் வெளியிட்டுள்ள பாதுகாப்புத்தரப்பு கூறுகின்றது.

இவர்களை தவிர ஏனைய 78 பேரும் வைத்திய உதவி தேவைப்படாதவர்கள் என்றும் அந்த தகவல்கள் மூலம் அறியமுடிகின்றது இதேவேளை 8ஆவது தொகுதியாக அழைத்துவரப்பட்டவர்களில் 357 பேரின்விபரம் வருமாறு;

(இல.1 ஐசியு) எஸ்.பூமாதேவி (வயது 58) நவாலி,கரமச்சாரி (வயது 27) மாத்தளன், தெனிசிகா (வயது 5) முள்ளிவாய்க்கால், ஜே.செல்லக்கிளி (வயது46) பூநகரி,கே.விஜயலக்சுமி (வயது 24) கிளிநொச்சி,வி.சுகந்தி (வயது 32),பி.கிருபாகரன் (வயது 28) கிளிநொச்சி,தேனுசா(வயது 2 1/2) கிளிநொச்சி,உசாந்தினி (வயது 25) முள்ளியவளை,தேனுசி (வயது 2) முள்ளிவாய்க்கால்,

கே.நாகராசா (வயது 55) சாவகச்சேரி, வி.கனகவேல் (வயது 44) வட்டக்கச்சி, ஜி.தினேஷ் (வயது 14) வட்டக்கச்சி,செல்வநாயகி (வயது 47) பூநகரி,சண்முகலிங்கம் (வயது 66) யாழ்ப்பாணம், சந்திரகாந்தி (வயது 38),கே.மகேஷ்வரி (வயது 60) கொடிகாமம், என்.செல்வராஜா (வயது 60) கிளிநொர்ச்சி, எஸ்.வேலாயுதபிள்ளை (வயது 59) பூநகரி, எஸ்.மனோராஜா (வயது 15) மட்டக்களப்பு,

பி.உவின் (வயது 36) யாழ்ப்பாணம்,பானு (வயது 4) யாழ்ப்பாணம்,அன்னிவேபி (வயது 4) புங்குடுதீவு,மாதம்மா (வயது 30) புங்குடுதீவு, மரியலரா (வயது 3) யாழ்ப்பாணம்,டிலானி (வயது 9) யாழ்ப்பாணம், டிலோஜினி (வயது 12) யாழ்ப்பாணம், எஸ்.இரத்தினசிங்கம் (வயது 69) பளை, தனபாலச்சந்திரன் (வயது 43) வேலணை, என்.இராமச்சந்திரன் (வயது 67) பரந்தன்,

எஸ்.சீதேவி (வயது 60) யாழ்ப்பாணம், எஸ்.கேமலதா (வயது 25) புதுக்குடியிருப்பு, யு.சபிலா (வயது 36) சுதந்திரபுரம், ஜோகராணி (வயது 45) புதுக்குடியிருப்பு, ஐ.சிற்றம்பலம் (வயது 70) கோண்டாவில், அல்போன்ஸ் ரொசலின் (வயது 60) முள்ளியன்குளம், கணபதிப்பிள்ளை (வயது 53) முள்ளியவளை, மனோன்மணி (வயது 62) வட்டப்பளை,சிவபாக்கியம் (வயது 57) அரியவளை,எ.பிரதீபன் (வயது 31) கிளிநொச்சி,

ராஜாராம் (வயது 72) கிளிநொச்சி,புஷ்பராசா (வயது 60) கிளிநொச்சி,எம்.காசிநாதன் (வயது 70) முரசுமோட்டை,கிருதுர்சன் (வயது 4) யாழ்ப்பாணம்,ரி.சோபனா (வயது 28) அச்சுவேலி, லக்சிகா (வயது 7) அச்சுவேலி, வி.குமுதா (வயது 32) பொலிகண்டி,எஸ். பூரணம் (வயது 60) இரணைமடு,ஜேசுதாஸ் (வயது 43) முல்லைத்தீவு, என்.ராஜசிங்கம் (வயது 74) முல்லைத்தீவு,

ஆர்.கோணேஸ்வரி (வயது 69) மாங்குளம் வீதி,கே.கிருஸ்ணகுமாரி (வயது 34) அம்பாறை, சர்மின் (வயது 11/2) அம்பாறை,சர்மிலா (வயது 3) அம்பாறை, என்.துரைராஜா (வயது 24) வவுனியா,எஸ்.தனபாலசிங்கம் (வயது 71) யாழ்ப்பாணம்,ரி.இராசம்மா (வயது 70) யாழ்ப்பாணம், ரி.புனிதவதி (வயது 65) அம்பலவன் பொக்கணை,துரைசிங்கம் (வயது 69) அம்பலவன் பொக்கணை,பொன்னம்மா (வயது 74) முள்ளியவளை,டி.அன்னலச்சுமி (வயது 66),ஐ.சரஸ்வதி (வயது 73) பொக்கணை,

கே.யேகேந்திரன் (வயது 26) யாழ்ப்பாணம், தெய்வானைப்பிள்ளை (வயது 70) யாழ்ப்பாணம், பொன்னம்பலம் (வயது 73) முள்ளியவளை, அல்போன் (வயது 58) அக்கராயன்குளம், பி.தங்கத்துரை (வயது40) குமிழமுனை ,ஏ.ஐயாத்துரை (வயது73) மீசாலை,ஆர்.தர்மலிங்கம் (வயது64) கிளிநொச்சி,ரி.கனகம்மா (வயது67) கிளிநொச்சி,எஸ்.சிசிலியா(வயது80) அலம்பில், வை.சுதர்சினி பூநகரி, வை.ஈஸ்வரி பூநகரி, எஸ்.பரமேஸ்வரநாதன் (வயது58) முல்லைத்தீவு, பி.அன் னலக்ஷ்மி (வயது61) கிளிநொச்சி, பி.அன்னலக்ஷ்மி (வயது61) வட்டக்கச்சி, எஸ்.டொமினிக் (வயது67)புதுக்குடியிருப்பு,கே.வசந்தன் (வயது 32) புதுக்குடியிருப்பு,வி.வேணுஸ் (வயது05) புதுக்குடியிருப்பு ,ரி. சிங்கராசா (வயது67) முல்லைத்தீவு,கே.டக்ஸன் (வயது09) முல்லைத்தீவு, கே.ஜோன்ஸன் (வயது05) முல்லைத்தீவு,

ஜே. உகலிஸ்டா (வயது41) முல்லைத்தீவு, எஸ்.பிலாமினி (வயது65) கிளிநொச்சி,ரி.தர்சினி (வயது23) வவுனியா,ரி.துஷான் (வயது 02) வவுனியா,எஸ்.கனகசிங்கம் (வயது57) கொக்குத்தொடுவாய்,எஸ்.வள்ளியம்மா (வயது 68) உடையார்கட்டு, (இல .90) (வயது71) உடையார்கட்டு ,தனலக்ஷ்மி (வயது65) உடையார்கட்டு, அம்பிகாவதி (வயது 74) புளியங்குளம்,ஆர்.சரஸ்வதி (வயது24) வட்டக்கச்சி,விவேகானந்தன் (வயது60) முள்ளியவளை,

எஸ்.அருள்வாசன் (வயது81) வலயாறு, இலங்கைநாதன் (வயது65) யாழ்ப்பாணம், ஆர்.பத்மநாதன் (வயது64) வவுனியா,வி.நடராசா (வயது 78) குறுணிக்கல்,எஸ்.வரதராசா (வயது75) கிளிநொச்சி,எம்.செபமாலை (வயது73) அடம்பன், கே.சாந்தமூர்த்தி (வயது72) சாவகச்சேரி, எஸ்.சிவஞானதேவி(வயது 64) வவுனியா, எஸ்.சியந்தி (வயது26) கல்முனை கே.பெருமாள் (வயது77) வட்டக்கச்சி,கே.முனுசாமி (வயது52) முள்ளியவளை, தங்கராணி (வயது 25) விஸ்வமடு, டிலர்சன் (7நாள்) விஸ்வமடு, மேரிவசந்தி (வயது 32) இளவாலை,கே.சிவாஜினி (வயது27) யாழ்ப்பாணம்,கே.நிலவன் (வயது01) யாழ்ப்பாணம், வை.றோசன் (வயது25) கிளிநொச்சி,வி.பமிலா (வயது28) யாழ்ப்பாணம், மகேஸ்வரி (வயது 52) அடம்பன், மித்து (வயது03) அடம்பன், கே.ஸ்ராலின்(வயது35)இளவாலை,எஸ்.அபிநயா (வயது04) இளவாலை கே.குணரத்தினம் (வயது57) யாழ்ப்பாணம்,யதுசன் (03 மாதம்) யாழ்ப்பாணம்,யதூசா (வயது 03) யாழ்ப்பாணம்,

எஸ்.சிவபாக்கியம் (வயது70),எஸ்.முத்துப்பிள்ளை (வயது70) வவுனியா,கே.தங்கேஸ்வரி (வயது49) ஊர்காவற்றுறை யாழ்ப்பாணம், ஆர்.சுதர்சினி (வயது23) யாழ்ப்பாணம், ஆர்.தருகன் (வயது3 1/2) யாழ்ப்பாணம், லூர்தம்மா (வயது75) இரணைப்பாலை, டி.இராசகுமார் (வயது 29) நெடுந்தீவு,கனிஷ்ரா(வயது 42) நெடுந்தீவு,ஏ.அபிசன் (வயது 1/2),தம்சுதி (வயது 8) (இல.130-அறியப்படவில்லை) எஸ்.பூபதி (வயது 59) துணுக்காய்,

என்.சந்திரவர்மன் (வயது 36) யாழ்ப்பாணம், பி.பாலசிங்கம் (வயது 63) துணுக்காய்,கே.நாகேஸ்வரன் (வயது 67) விஜயலம்குளம்,ஆர்.சண்முகநாதன் (வயது67) நெடுங்கேணி,எஸ்.கிறிஸ்டினா (வயது 37) மன்னார்,எஸ்.லிவின்ஸா (வயது 1 1/2) மன்னார், எஸ்.தரோமி (வயது 10) மன்னார்,எஸ்.நிரோமி (வயது 8) மன்னார், எஸ்.சிவசுப்பிரமணியம் (வயது 70) நெடுங்கேணி,விநாயகமூர்த்தி (வயது68) கிளிநொச்சி, கே.யோகராசா (வயது32) அனலைதீவு,வி.லூர்தம்மா(வயது 61) அனலைதீவு, வி.சிவபாக்கியம் (வயது80)அனலைதீவு,கே.புவனேஸ்வரி (வயது 50) பலாலி, சந்தானம் (வயது79) மாத்தளன், பெரியவெள்ளையன் (வயது57) உடப்பு,

எஸ்.ரத்தினம்(வயது70)மாத்தளன், எம்.ஜெயக்குமார்(வயது32) சாவகச்சேரி, வேலுப்பிள்ளை (வயது 33) முல்லைத்தீவு,ரி.சுந்தரம் (வயது55) விஸ்வமடு,எஸ்.செல்வராணி (வயது 52) விஸ்வமடு,கே.துரைமணி (வயது61), துணுக்காய் , வி.மகேஸ்வரி (வயது50) நேசமடு ,மேரிநிஷா (வயது62) மன்னார் ,யோசேப் (வயது 67) மடு,எ.விமலா தேவி (வயது 56) புதுக்குடியிருப்பு, என். நிரஜா (வயது 08) புதுக்குடியிருப்பு, பி.புஸ்பா (வயது 46) மன்னார்; அபிநயா (வயது 06) மன்னார்,சாருயா (வயது 11) மன்னார்,வி.தருஜன் (வயது 04) வவுனியா , வி.சாந்தன் (வயது 06)வவுனியா,வி.நாகராணி (வயது 32) வவுனியா ,கிருஷாந்தன் (வயது 08) வவுனியா,கீர்த்தனா (வயது 08) வவுனியா, திவாயினி (வயது 33) யாழ்ப்பாணம், எஸ்.ம்னிஷா (வயது 02) யாழ்ப்பாணம்,கே.திலகராணி (வயது 27) வவுனியா, கே.சதீஸ் (வயது 02) வவுனியா, எஸ்.தவமணி தேவி (வயது 53) வட்டக்கச்சி , (இல.172 அறியப்படவில்லை),ஏ.அந்தோனிதாசன் (வயது 61) மன்னார், நித்தியானந்தன் (வயது 50) மல்லாவி, செல்லத்துரை (வயது62)வட்டக்கச்சி,வளர்மதி (வயது16)மல்லாவி,

சந்திரவதனி (வயது34) மல்லாவி,டிலக்ஷனா (வயது 8) மல்லாவி,எஸ்.துளசி (வயது 18) மல்லாவி,தெரசத் (வயது 10) மல்லாவி, நிதூஷன் (வயது 4) மல்லாவி, எஸ்.கஜீந்திராய் (வயது 12) மல்லாவி, சான்சன் (வயது 7) வன்னேரி, பி.ஜோசப்பின் (வயது (43) வன்னேரி,ரோசானி (வயது 20) வன்னேரி,

லிங்கேஸ்வரி (வயது 27) வட்டக்கச்சி, துளசிகா (வயது 6) வட்டக்கச்சி,நிலோஜினி (வயது 9) வட்டக்கச்சி,சாருஜன் (வயது 11) வட்டக்கச்சி, வி.கருணேசன் (வயது 29) பூநகரி,ரோகினி (வயது 31) பூநகரி,கபிலினி (வயது 3) பூநகரி, சிவபாக்கியம் (வயது 68) புதுக்குடியிருப்பு, ரி.இராசம்மா (வயது 65) முரசுமோட்டை, என்.மாணிக்கம் (வயது 75) முல்லைத்தீவு, கே.காசிபதி (வயது 67) புத்தூர். எஸ்.ராஜரத்தினம் (வயது 62) முறிப்பு,எஸ்.செல்வம் (வயது 74) கீரிமலை. ரி.நல்லதம்பி (வயது 84) புதுமுறிப்பு, கே.வேலுப்பிள்ளை (வயது 70) புதுக்குடியிருப்பு, எம்.விஜயலக்சுமி (வயது 69) கிளிநொச்சி, என்.சின்னத்தங்கம் (வயது70) முரசுமோட்டை, வை.நந்தினி (வயது 35) முருசுமோட்டை, வை.கீர்த்திகா (வயது 10) முரசுமோட்டை, வை.திலக்சனா (வயது 8) முரசுமோட்டை, வை.யாழினி (வயது 1) முரசு மோட்டை,டபிள்யூ. விஜயாதேவி (வயது 64) மடு,எஸ்.பழனி (வயது 67) கிளிநொச்சி,பி.தெய்வானை (வயது 60) கிளிநொச்சி,எஸ்.கணேசன் (வயது 79) சாவகச்சேரி,எஸ்.வள்ளியம்மா (வயது 65) புங்குடுதீவு, எஸ்.சவரிமுத்து (வயது 73) மன்னார்,எஸ்.அந்தோனி (வயது 70) அடம்பன், எஸ்.தோமைமாரிசன் (வயது 64) மன்னார்,கே.பொன்னையா (வயது 75) யாழ்ப்பாணம்,எஸ்.சிவகுமார் (வயது 33) முத்தையன்கட்டு,பி.நடேசபிள்ளை (வயது 75) யாழ்ப்பாணம்,வை.நம்பியா (வயது 45) குருநாகல்,வி.டிலுக்சி (வயது 3) குருநாகல், சரோஜாதேவி (வயது 44) உடுத்துறை, கே.பொன்னம்மா (வயது 74) உடுத்துறை, யு.அருந்தவம் (வயது 75) கொக்கிளாய், ஜே.கந்தராஜா (வயது 65) யாழ்ப்பாணம்,

எஸ்.பொன்னம்மா (வயது 70) செம்பியன் பற்று, வள்ளியம்மா (வயது 48) தர்மபுரம், மீனாட்சி (வயது 80) கட்டைக்காடு, ஏ.தங்கம்மா (வயது 68)பெரியகுளம்,மனோகரன் (வயது30) கட்டைக்காடு, என்.இராஜேஸ்வரி (வயது 57) அம்பலவன் பொக்கணை,கே.நாசியம்மா (வயது 66) ஸ்கந்தபுரம்,

கே.பரமேஸ்வரி (வயது 67) பூநகரி, கே.கதிரவேலு (வயது 44) பூநகரி, என்.சிதம்பரபிள்ளை (வயது 64) கிளிநொச்சி,கே.இரத்தினசிங்கம் (வயது 65) உருத்திரபுரம்,எஸ்.நாகராணி (வயது 38) மானிப்பாய்,விதுஷா (வயது 10) மானிப்பாய், நிதர்சன் (வயது 9) வேலிக்குளம், யாழன் (வயது 3) மானிப்பாய்,

கிருபாமரிதேவி (வயது 36) முல்லைத்தீவு, யாழினி (4 மாதம்) புதுக்குடியிருப்பு,ஜே சுவித்திரா (வயது 29) நல்லூர்,சுஜித் (வயது 11) யாழ்ப்பாணம்,லக்சனா (வயது 9) யாழ்ப்பாணம், அதிவண. ஜோசப்பினி சொலமன் (வயது 70) வலைஞர்மடம்,மணியம்மா (வயது 33) வட்டக்கச்சி, எஸ்.சிலம்பிசை(வயது 1) வட்டக்கச்சி, எஸ்.வசந்தராஜா (வயது 10) மாத்தளன், துஷியந்தன் (வயது 8) மாத்தளன், தனுசா (வயது 12) மாத்தளன்,பகீரதன் (வயது 4) மாத்தளன், பி.சிதம்பரம் (வயது 81) கிளிநொச்சி,

பாலசிங்கம் (வயது81) பேசாலை வடக்கு, ரி.சிதம்பரம் (வயது64) பொக்கணை, பி.சிசிலியா (வயது86) அலம்பில் வடக்கு, ஜே.மரியநாயகி (வயது68) வவுனியா, லவிரூன், கனகமணி (வயது69) துணுக்காய், திருச்செல்வம் (வயது69) வட்டக்கச்சி, புஸ்பராணி (வயது40) மல்லாவி, ஞானதர்சினி (வயது 08) மல்லாவி, கிருஷ்ணபிள்ளை (வயது 72) வெள்ளாங்குளம், அப்பாத்துரை (வயது78) யாழ்ப்பாணம், எஸ்.தர்மலிங்கம் (வயது58) யாழ்ப்பாணம்,எஸ்.பொன்னம்பலம் (வயது 60) ஸ்கந்தபுரம், பி.தர்மசீலன் (வயது27), ஸ்கந்தபுரம், பி.விஜயலக்சுமி (வயது54) ஸ்கந்தபுரம், வி.சோமசுந்தரம் (வயது72) யாழ்ப்பாணம், கனகேயன்(வயது79) கிளிநொச்சி, ஆர்.ஜெகதீஸ்வரி (வயது27) முத்தையன்கட்டு, எஸ்.கயல்விழி முத்தையன் கட்டு, பேபிசாளினி (வயது06) முத்தையன்கட்டு, எஸ்.சிதம்பரம் (வயது68) முத்தையன்கட்டு, கணேஸ் வட்டக்கச்சி, எஸ்.சுசந்தி (வயது 24) யாழ்ப்பாணம், சுந்தர் (வயது 03) யாழ்ப்பாணம், கிருஷ்ணமூர்த்தி (வயது32) கிளிநொச்சி, கே.கருப்பையா (வயது 59) தேவிபுரம், ஆர்.தங்கவேல் (வயது67)தர்மபுரம், ரி.நிதாயினி (வயது 30)மாங்குளம்,ரி.தாரணிகா (வயது04) மாங்குளம்,ரி.தர்மிகா (வயது01) மாங்குளம், கே.கனகபிள்ளை (வயது77) புதுக்குடியிருப்பு, ஐ.யதுகுலேந் திரன் (வயது52) வட்டக்கச்சி, என்.இராசசூரியம் (வயது68) யாழ்ப்பாணம், ஆர்.வசந்ததேவி (வயது68) துணுக்காய், கே.சரஸ்வதி (வயது63) கிளிநொச்சி, ஐ.குணரத்தினம் (வயது 73) கிளிநொச்சி, கே.கோபாலரத்தினம் (வயது 62) யாழ்ப்பாணம், கே.சந்திராதேவி (வயது48) யாழ்ப்பாணம், எஸ்.இராஜேஸ்வரி (வயது24) கள்ளிப்பாடு,

எஸ்.இளவரசன் (வயது01) கள்ளிப்பாடு, பி.சிவகுரு (வயது78) வட்டக்கச்சி, வி.காமாட்சி (வயது70) மாத்தளன், எம்.சத்தியவான் (வயது 64) மாங்குளம், உ.பாலசிங்கம் (வயது 74) கனகராயன் குளம், உ.ரூபவதி(வயது70) முரசுமோட்டை, வி.பவேஸ்வரி (வயது63) விஸ்வமடு . வி.தவசேகரி (வயது45) கிளிநொச்சி, வி.சாமுவேல் (வயது 01) கிளிநொச்சி , நிரோஜன் (வயது 12) கிளிநொச்சி,

நிசாந்தன் (வயது08) கிளிநொச்சி, ஜீவதரன் (வயது10) கிளிநொச்சி , ஆர்.முருகையா (வயது68) தர்மபுரம் , எம்.வெள்ளையம்மா (வயது 60)தர்மபுரம்,கே.கமலாதேவி (வயது 35) காரைநகர், கே.தனுசா (வயது09) காரைநகர், கே.அஜந்தா(வயது10) காரைநகர் , கே.கிருஷாந்தன் (வயது 07) காரைநகர், எஸ்.அம்பிகை முல்லைத்தீவு, எஸ்.சிவபாக்கியம் (வயது60) நெடுங்கேணி,

எஸ்.செல்வரத்தினம் (வயது 60) நெடுங்கேணி, எஸ்.இராஜரட்ணம் (வயது 75) கிளிநொச்சி, எ.சிற்றம்பலம் (வயது 75) அச்சுவேலி, செல்வநாயகம் (வயது 68) தம்பலகாமம், சிவலிங்கம் (வயது 72) மல்லாவி, என்.கிருஸ்ணபிள்ளை (வயது 67) யாழ்ப்பாணம், எஸ்.முத்துராசா (வயது 67) மல்லாகம்,எஸ்.அன்ன பூரணம் (வயது 64) மல்லாவி, எஸ்.சிவகங்கை (வயது 65) தம்பலகாமம், எஸ்.கெஜிந்திரன் (வயது 43) யாழ்ப்பாணம், புவனேஸ்வரி (வயது 60) யாழ்ப்பாணம், ஆர்.ஜெகதா (வயது 37) பூநகரி, ஆர்.ரேஸ் வரன் (வயது 37) பூநகரி, கே.நந்தினி (வயது 39) இரணைப்பாலை, ரிசிவிசுனா (வயது 2) இரணைப்பாலை, எஸ்.அன்னமிலன் (வயது 6)இரணைப்பாலை, எஸ்.சிந்துஜா (வயது 5) இரணைப்பாலை எஸ்.தெய்வானை (வயது77) கிளிநொச்சி, இ.விரோனிகா (வயது 64) யாழ்ப்பாணம், ரி.அற்புதநாதன் (வயது 67) பாலைநகர், ஆர்.மனோன்மணி (வயது 64) கிளி நொச்சி, (இல.332 அறியப்படவில்லை), கலாவதி (வயது 23) மாத்தளன்,இந்துசன் (6 மாதம்) மாத்தளன், பி.அன்னம்மா (வயது 68) சுண்டிக்குளம், பூரணி (வயது 6) சுண்டிக்குளம், கே.வேலாயுத பிள்ளை (வயது 62) திருவையாறு, எஸ்.திருநாவுக்கரசு (வயது 61) திருவை யாறு,யு.ராதா (வயது 23) மன்னார்,சுந்தர வண்ணன் (வயது 2) மன்னார், தனுசிகா (வயது 5) மன்னார்,ஏ. ரோஸ் மேரி (வயது 78) அலம்பில்,டி.சண்முகம் (வயது 72) வவுனியா,எஸ்.நாகரத்தினம் (வயது 75) பூநகரி,எஸ்.ராமலிங்கம் (வயது 85) கிளிநொச்சி, கே.சியாமளா (வயது 30) கிளிநொச்சி,தனுசா (வயது 8) கிளிநொச்சி, கே.யதுசன் (வயது 1) கிளிநொச்சி,கே.றிகிபா (வயது 3) கிளிநொச்சி, எஸ்.துரைராஜா (வயது 71) யாழ்ப்பாணம், ரி.லுக்ஸ்சிகா (வயது 10) பொக்கணை, என்.பவளம் (வயது 73) பொக்கணை,கே.மயில்வா கணன் (வயது 62) யாழ்ப்பாணம், எஸ்.தங்கரத்தினம் (வயது 62),யாழ்ப்பாணம்,ரி.வள்ளியம்மா (வயது 66) யாழ்ப்பாணம்.

## இன்று ஒரு தகவல்

# கரைசேரா மனிதர்கள்!

ஒரு ஊரில் ஞானி ஒருவர் இருந்தார். அவர் படுக்கையில் இருந்தார். இன்னும் சிறிது நேரம் தான் இந்த உலகத்தில் இருக்கப் போகிறார்.

அவரைச் சுற்றி ஏகப்பட்ட கூட்டம். ஏற்கனவே அவருடைய உபதேசங்களைக் கேட்ட பலர் அவரைச்சுற்றி நின்றிருந்தார்கள்.

அந்த ஞானி மெதுவாக கண்ணைத் திறந்து பார்த்தார். எல்லோரும் அவருடைய கடைசி வார்த்தையைக் கேட்பதற்காக ஆவலுடன் காத்துக் கொண்டிருந்தனர்.

அந்த ஞானி மெதுவாக பேச ஆரம்பித்தார்.

"நான் எனது வாழ்நாள் முழுவதும் உங்களுக்கு பல போதனைகளை சொல்லியிருக்கிறேன். பேரனாந்தம், மகிழ்ச்சி, தியானம் பற்றியெல்லாம் சொல்லியிருக்கிறேன்.

இப்பொழுது நான் வேறு ஒரு கரைக்குப் போய்க்கொண்டிருக்கிறேன். நான் இனிமேல் இந்தக் கரையில் இருக்க மாட்டேன். நீங்கள் நான் சொல்வதையெல்லாம் கேட்டீர்கள்.

ஆனால் எதையும் நடைமுறைப்படுத்திப் பார்க்கவில்லை. எல்லாம் கேட்டதோடு சரி. அத்தோடு விட்டுவிட்டீர்கள். பின்னர் அதைத் தள்ளிப் போட்டுக் கொண்டே வந்து விட்டீர்கள்.

இப்பொழுது நான் போய்க் கொண்டிருக்கிறேன். உங்களில் யாராவது என்னுடன் வருவதற்குத் தயாரா? என்று கேட்டார்.

அவ்வளவு தான் யாரும் வாயைத் திறக்கவில்லை. ஒரே மௌனம். இந்தச் சமயத்தில் பின்னால் நின்று கொண்டிருந்த ஒருவன் கையைத் தூக்கினான். ஞானி அவனைப் பார்த்தார்.

இவன் ஒருவனுக்காவது என்னுடன் வருவதற்கு தைரியம் இருக்கிறதே! என்று நினைத்தார்.

ஆனால் அந்த ஆள் என்ன சொன்னான் தெரியுமா?

ஐயா... நீங்கள் கேட்கும் போது நான் உடனே எழுந்து நிற்கவில்லை. கையை மட்டும் தான் தூக்கினேன். என்ன காரணம் என்றால் நான் எப்படி அடுத்த கரைக்கு வந்து சேருவது என்பதை தெரிந்து கொள்வதற்காகத்தான் அந்த விபரத்தை மட்டும் இப்பொழுது உங்களிடமிருந்து தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஏனெனில் இப்பொழுது நான் உங்களுடன் வருவதற்கு தயாராக இல்லை. எவ்வளவோ காரியங்களை நான் இன்னும் முடிக்க வேண்டியிருக்கிறது.

அதனால் இன்று உங்களுடன் வரமுடியவில்லை. அது மட்டுமல்ல இப்பொழுது உங்களுடன் அடுத்த கரைக்கு வந்தால் திரும்பி வர முடியாது என்று வேறு சொல்கிறீர்கள்.

அதனால் இப்பொழுது நான் வரவில்லை. இன்னொரு நாள் வருகிறேன். அதனால் இப்பொழுது நீங்கள் விளக்கமாகச் சொல்ல வேண்டும்.

அடுத்த கரையை அடைவது எப்படி? ஒருதடவை அதை விளக்கமாக சொன்னீர்களானால் நன்றாக ஞாபகப்படுத்திக் கொள்வேன். அந்த சரியான சமயம் வரும்போது இது எனக்கு உதவியாக இருக்கும்! என்றானாம்.

ஆனால் உண்மை என்ன தெரியுமா? அந்த சரியான சமயம் வரவே இல்லையாம்.

இந்தக்கதை எல்லோருக்குமே பொருந்தும். எல்லோரும் அந்த சரியான தருணத்திற்காகத்தான் காத்திருக்கிறார்களாம். அதற்காக ஜோசியம் பார்க்கிறார்கள். கைரேகை பார்க்கிறார்கள். நாளைக்கு என்ன நடக்கும் என்ற ஆவலில் எல்லோரும் இருக்கிறார்கள்.

ஆனால் அந்த ஒருநாள் ஒருபோதும் வரப்போவதில்லை. நீங்கள் தள்ளிப் போடுவதற்காக பல அர்த்தமில்லாத காரணங்களைத் தேடுகிறீர்கள் – என்கிறார் ஓஷோ.

காத்திருப்பிலேயே நமது காலம் ஓடிப்போகிறது. ஏனெனில் இன்றைய சிந்தனை நமக்கு இருப்பதில்லை. நாளைய சிந்தனையிலேயே இன்றைய பொழுதை ஓட்டிக் கொண்டிருக்கிறோம். நாளைக்கு... நாளை மறுநாள் பற்றிய சிந்தனை... இப்படியே போய்விடும். கரையைத் தொட்டுப் பார்ப்பதெப்போ?

நம்ம ஆள் ஒருவர் ரயில்வே பிளாட்பாரத்தில் நின்று கொண்டு அங்கிருந்தவர்களிடம், "சேர்... கிழக்கே போகும் ரயில் போய்விட்டதா?" என்றார்.

"போய்விட்டது" என்றார்கள்.

சிறிது நேரம் கழித்து, "சேர் ... மேற்கே போகும் ரயில் போய் விட்டதா என்றார்.

"போய்விட்டது" என்றார்கள்.

சிறிது நேரம் கழித்து, "சேர் ... பத்தரைக்கு போகும் ரயில் போய்விட்டதா?" என்றார்.

இப்படியே காலையிலிருந்து மாலைவரை ஒரே இடத்தில் நின்று கேட்டுக் கொண்டிருந்தார்.

இதைப்பார்த்த ஒருவர் அவரிடம், "நீங்கள் எங்கு போக வேண்டும்?" என்று கேட்டார்.

இவர் மெதுவாக "இந்த ரயில்வே வரிசையைத் தாண்டி அந்தப் பக்கம் போக வேண்டும்" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# இசுறு பாடசாலைக் கருத்திட்டத்திற்கு

## யாழ். மாவட்டத்தில் 6 பாடசாலைகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

மகிந்த சிந்தனை வேலைத் திட்டத்தின் கீழ் தேசத்திலுள்ள பிள்ளைச் செல்வங்களின் அறிவையும் நற்குணங்களையும் வளர்ப்பதைத் தொனிப் பொருளாகக் கொண்டு சகல பௌதீக வளங்களும், மனித வளங்களும் கொண்ட தலைசிறந்த பாடசாலைகளாக முன்னேற்றப் படுவதற்காக யாழ் மாவட்டத்திலிருந்து 6 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

'இசுறு பாடசாலைக் கருத்திட்டம்' எனும் இவ் நிகழ்ச்சித்திட்டம், ஜனாதிபதி செயலகத்தின் வழிகாட்டலின் கீழ் கல்வி அமைச்சினால் செயற்படுத்தப்படுகின்றது.

வறுமை நிலையை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவுகளின் வகையீட்டின் படி, வறுமை நிலை கூடுதலாக நிலவும் பிரதேச செயலாளர் பிரிவுகளிலிருந்து ஆரம்பமான இக்கருத்திட்டத்திற்காக உள்நாட்டு நிதியங்களும், வெளிநாட்டு நிதியங்களும் ஈடுபடுத்தப்படுகின்றன.

இச் செயற்திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தின் 4 கல்வி வலயங்களிலிருந்து 6 பாடசாலைகள் ஜனாதிபதி செயலகத்தினால் [illegible] தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம், [illegible]வலிகாமம் கல்வி வலயத்திலிருந்[illegible]து புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி[illegible], ஸ்கந்த வரோதயக் கல்லூரி, விக்[illegible]ரோறியாக் கல்லூரி என்பனவும் தெ[illegible]ன்மராட்சி கல்வி வலயத்திலிருந்து வர[illegible]ணி மகா வித்தியாலயமும் வடமராட்[illegible]சி கல்வி வலயத்திலிருந்து கரவெட்[illegible]டி விக்[illegible]னேஸ்வரா வித்தியாலயமும் [illegible] தீவக[illegible]ணை கல்வி வலயத்திலிருந்து வேல[illegible]மும் மத்திய மகா வித்தியால[illegible] தெரிவு செய்யப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட பாடசா[illegible]லை தொடர்பாக சம்பந்தப்பட்ட [illegible]பாட சாலை அதிபர்களும், அப்பாட[illegible]சா லைகள் அமைந்துள்ள வல[illegible]யக் கல்விப் பணிப்பாளர்களுக்கும், [illegible]பிர தேச செயலாளர்களுக்கும் தெரியப் படுத்தப்படுத்தப்பட்டுள்ளதாகவும் இப்பாடசாலைகளிற்கு தேவைப் படும் மனித, பௌதீக வளங்கள் தொடர்பான விபரங்களை நாளை சனிக்கிழமைக்கு முன்னர் மாவட்ட செயலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு யாழ். அரச அதிபர் கே. கணேஷ் அறிவித்துள்ளார்.

இச் செயற்றிட்டம் யாழ். மேலதிக கல்விப் பணிப்பாளரினால் ஒருங்கிணைத்து செயற்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் மாவட்டச் செயலகத்தினால் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-6)

# கோண்டாவில் சமுர்த்தி வங்கி நடாத்தும்

## கிராம மட்ட தலைமைத்துவ பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலக வலயம் II ற்கு உட்பட்ட கோண்டாவில் சமுர்த்தி வங்கி நடாத்தும் கிராம மட்ட தலைமைத்துவ பயிற்சி நெறி நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு கோண்டாவில் இந்து மகா வித்தியாலய நூலக மண்டபத்தில் க. தர்மநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச செயலர் பா. செந்தில் நந்தனன், சிறப்பு விருந்தினராக மக்கள் வங்கி யாழ். பல்கலை கிளை முகாமையாளர் ந. நாகேஸ்வரன், கௌரவ விருந்தினராக கோண்டாவில் இந்து மகா வித்தியால அதிபர் சு. சண்முககுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்துடன் தலைமைத்துவ வளர்ச்சியும் அதன் அவசியமும் எனும் தலைப்பில் ஆசிரியர் ந. விஜயசுந்தரம், தலைமைத்துவமும் வாழ்க்கைத் திறனும் எனும் தலைப்பில் மாவட்ட இளைஞர் சேவை உத்தியோகத்தர் அ. சக்திவேல், முரண்பாடுகளும் தீர்வுகளிற்கான வழி வகைகளும் எனும் தலைப்பில் நல்லூர் மத்தியஸ்தர் சபை தவிசாளர் அ. யோகராஜா, பிறப்பு, திருமணம், இறப்பு சம்பந்தமான பதிவும் அவசியமும் எனும் தலைப்பில் பதிவாளர் திருமதி வரதலட்சுமி சோமசூரிய சிங்கம், சமுர்த்தி கருத்திட்டங்களும் மேம்படுத்தும் வழிமுறைகளும் எனும் தலைப்பில் தலைமையக சமுர்த்தி முகாமையாளர் தி. சந்திரகாந்தன் ஆகியோர் கருத்துரை வழங்கவுள்ளனர். (ஓ-6)

## இராசி பலன்

06.03.2009

(மாசி 22, வெள்ளிக்கிழமை)

தசமி மாலை 6.18 மணிவரை


திருவாதிரை பிற்பகல் 2.44 மணிவரை

இராகுகாலம் 10.55 - 12.25 மணிவரை

சுபநேரம் 6.25-7.55 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | நினைத்த காரியம் நிறைவேறும், இனிய தகவல், கூட்டு முயற்சி, தனலாபம். |
| இடபம் | காரிய தாமதம், கடின வார்த்தை, தனவிரயம், குடும்பக் கவலை. |
| மிதுனம் | தெய்வ தரிசனம், பெரியோர் ஆசி, நல்ல முயற்சி, சயனசுகம். |
| கடகம் | காரிய அலைச்சல், உறவினர் மனஸ்தாபம், சுபசெலவு, திடீர் நன்மை. |
| சிங்கம் | தெய்வ தரிசனம், எடுத்த காரியம் கைகூடும், குடும்ப மகிழ்ச்சி, கீர்த்தி. |
| கன்னி | அதிகாரம், மனதிற்கினிய தகவல், செய்தொழில் விருத்தி, ஆரோக்கியம். |
| துலாம் | புதிய திட்டமிடல், திடீர்பயணம், எதிர்பாராத செலவு, உறவினர் சந்திப்பு. |
| விருச்சிகம் | அச்சமான நிலை, காரிய தடங்கல், உடல் நலக்குறைவு, போசன சுகம். |
| தனுசு | தெய்வதரிசனம், எடுத்த காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை, கீர்த்தி. |
| மகரம் | ஜனவசியம், தடைப்பட்ட காரியம் கைகூடும், ஆரோக்கியம், தனவருவாய. |
| கும்பம் | வியாபார நன்மை, தனவிரயம், எடுத்த கருமங்கள் தாமதமாகும், புத்திரரால் கவலை. |
| மீனம் | மனச்சஞ்சலம்,வேலையில் ஆர்வம், பிரயாணம், பிதாசிந்தை. |

வளவன்



வட்டு சுப்பிரமணிய வித்தியாசாலையின் முன்னாள் அதிபர் மா. செல்வராஜாவின் சேவை நலன் பாராட்டு விழாவில் சங்கானைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் துரை எங்கரசு விழா நாயகனுக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும் அருகில் திருமதி செல்வராசா நிற்பதையும் படத்தில் காணலாம்.

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 80 |
| உருளைக்கிழங்கு | 110 | 110 |
| பச்சைமிளகாய் | 50 | 60 |
| தக்காளி | 50 | 60 |
| அவரை | 25 | 30 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 70 |
| கோவா | 20 | 40 |
| கரட் | 50 | 50 |
| பூசணி | 20 | 40 |
| புடோல் | 20 | 40 |
| வாழைக்காய் | 70 | 70 |
| சின்ன வெங்காயம் | 25 | 30-40 |
| பெரிய வெங்காயம் | 50 | 50-60 |
| பாகற்காய் | 35 | 50 |
| வெண்டிக்காய் | 25 | 40 |
| கரணைக் கிழங்கு | 25 | 30 |
| பயிற்றங்காய் | 30 | 35 |
| லீக்ஸ் | 100 | 110 |
| போஞ்சி | 20 | 30 |
| கீரை - 1 பிடி | 15 | 20 |
| தேசிக்காய் | 120 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30 |

## செயலமர்வு

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளில் புதிய கல்வி சீர்திருத்தத் திட்டத்தின் கீழ் தரம் 8க்கு நடன பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்றும் நாளையும் காலை 8 மணிமுதல் மாலை 4.30 மணி வரை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வுக்கு வரும் ஆசிரியர்கள் நாட்டியப் பயிற்சி உபகரணங்களுடன் வருகை தருமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (ஓ-2, 29)

## ஆளுமை விருத்தி கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ள பெண்களுக்கான ஆளுமை விருத்தி கலந்துரையாடலில் யாழ். கல்வி வலயப் பாடசாலைகளைச் சேர்ந்த சகல பெண் அதிபர்களையும் கலந்து கொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுக் கொண்டுள்ளார். (ஓ-7)

## பயிற்சிக் கல்லூரி இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

நீண்டகாலமாக குருநகரில் இயங்கி வந்த யாழ்.மாவட்டக் கூட்டுறவு பயிற்சிக் கல்லூரி, நிர்வாக சிக்கல் மற்றும் போக்குவரத்து நிலைமை என்பன கருதி தற்போது யாழ் வீரசிங்கம் மண்டபத்தின் 5 ஆம் மாடிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி அதிபர் திருமதி வே.செல்லமுத்து தெரிவித்துள்ளார். (ஓ-30)

# புலமைப் பரிசில் வழங்குவது தொடர்பில்

# — புதிய சுற்றுநிருபம் வெளியீடு —

(யாழ்ப்பாணம்)

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்குவதற்கு பெற்றோர்/ பாதுகாவலருக்கான வருமான மட்டத்தை மறுசீரமைத்தல் தொடர்பான புதிய சுற்றுநிருபம் கல்வியமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது.

இதுவரை ரூபா இரண்டாயிரமாக இருந்த பெற்றோரின் மாதாந்த வருமான எல்லை இச்சுற்று நிருபத்திற்கமைவாக 4ஆயிரத்து 500 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் சமுர்த்தி வேலைத் திட்டத்தின் மூலம் கிடைக்கும் உதவிகள் வருமான எல்லைக்குட்படுத்தப்பட மாட்டாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம் மறு சீரமைப்புக்கள் 2009 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை தொடக்கம் அமுலில் இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-6,7)

# உள்ளூரில் உற்பத்தியாகும் மதுபானம் விலைக்குறைப்பு

(யாழ்ப்பாணம்)

உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் மதுபானத்தின் விலைக்குறைப்பு தொடர்பாக நேற்று மாவட்டச் செயலகத்தில் அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்ற கூட்டத் தீர்மானத்திற்கு அமைவாக இன்று வெள்ளிக்கிழமையில் இருந்து கீழ்க் குறிப்பிடப்படும் விலைகளில் மதுபானம் விற்பனை செய்வது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும், இந்த விலைகளில் மதுபானம் நுகர்வோருக்குக் கிடைப்பதனை சம்பந்தப்பட்ட வடிசாலைகளின் நிர்வாகம் உத்தரவாதப் படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

இதன்பிரகாரம் திக்கம் பனம் சாராயம் ரூபா 660 இல் இருந்து ரூபா 550 ஆகவும், வலிகாமழ் (VSV-99) பனம் சாராயம் , வரணி பனம் சாராயம் ஆகியன ரூபா 600 இலிருந்து 500 ஆகவும் குறைக்கப்பட்டுள்ளன. (ஓ)

## விரிவுரைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் சமூக விஞ்ஞானம் மற்றும் முன்பள்ளி கற்கை நெறிக்கான 2ஆம் அரை ஆண்டு விரிவுரைகள் நாளை மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ் பிராந்திய நிலையத்தில் ஆரம்பமாகும் என இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (ஓ-7)




## ஸ்ரீ கல்கி-பகவான் ஜென்ம தினம்

சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீகப் பிரார்த்தனை மையத்தில் ஸ்ரீ கல்கி பகவானின் 60 ஆவது ஜென்ம தின நிகழ்வு நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கொண்டாடப்படவுள்ளது. (ஓ)

## பாதபூஜையும் பஜனையும்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ கல்கி பத்மாவதி சமேத ஸ்ரீ கல்கி பகவானின் 60ஆவது ஜென்மதின பூஜை நாளை சனிக்கிழமை மாலை 3 மணிக்கு இல139 (35) கச்சேரி கிழக்கு ஒழுங்கையில் அமைந்துள்ள ஸ்ரீ கல்கி இல்லத்தில் நடைபெறவுள்ளது. (ஓ-2)

## ஆங்கில பாட தகுதிகாண் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் எந்திர தொழில்நுட்பவியல் கற்கை நெறிக்கான ஆங்கில பாட தகுதி காண் பரீட்சை நாளை சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் 12.30 மணிவரை செங்குந்தா இந்துக் கல்லூரியில் நடைபெறும் என யாழ். பிராந்திய இணைப்பாளர் சி.கந்தவேள் தெரிவித்துள்ளார். (ஓ-7)

## நிர்வாக சபைக் கூட்டம்

(தெல்லிப்பழை)

தெல்லிப்பழை உளநல சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் நா. கிருஸ்ண பிள்ளை தலைமையில் நடை பெறவுள்ளது.

இக்கூட்டத்தில் சங்கத்தின் செயற்றிட்ட விவகாரங்கள் குறித்து ஆராயப்படவுள்ளதாக சங்க செயலாளர் தெரிவித்துள்ளார். (ஓ-6)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

மேல் நீதிமன்றத்தில் நடைபெறவு ள்ள வழக்குகள் தொடர்பான யூரிமார் சபை தெரிவிற்காக அரச சேவை யில் உள்ள தமிழ், சிங்களம் பேசத் தெரிந்தவர்களிடம் இருந்து விண் ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரர்கள் தத்தமது பிரதேச செயலகங்கள் ஊடாக விண்ணப்பங்களை அனுப்பி வைக்கு மாறு யாழ். மாவட்ட மேலதிக அர சாங்க அதிபர் ஆ. சிவசுவாமி கேட்டுக் கொண்டுள்ளார். (ஓ-7)

## முதியோர் அடையாள அட்டை கிடைக்கப் பெறாதவர்களுக்கு

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேச செயலகத்திற்கு முதியோர் அடையாள அட்டைக்கு விண்ணப்பித்து இதுவரை அடையாள அட்டை கிடைக்கப் பெறாதவர்கள் எதிர்வரும் 11 ஆம் திகதி புதன்கிழமை பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம் என்று பிரதேச செயலர் செ. ஸ்ரீனிவாசன் அறிவித்துள்ளார். (ஓ-29)


## லியோக் கழகத்தின் பதவியேற்பு வைபவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் லியோக் கழகத்தின் புதிய கழக அங்கத்தவர் பதவியேற்பு வைபவம் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரி விசாலாட்சி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண லயன்ஸ் கழகங்களின் கபினற் செயலர் லயன் எஸ்.சிவராஜேஸ்வரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

அத்துடன் 25 மாணவர்கள் லியோக் கழகத்தில் இணைந்து கொள்ளவுள்ளனர். (ஓ-6)



சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினரால் வெளியிடப்படும் 'ஞானச்சுடர்' சஞ்சிகைக்கு ஆக்கங்களை எழுதிவருவோருக்கான கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பேரவைத் தலைவர் க. அருள்லிங்கம் உரையாற்றுவதையும், ஆச்சிரம இயக்குநர் அமுதகலாஜோதி செ. மோகனதாஸ் சுவாமிகள் நிகழ்வை நெறிப்படுத்துவதையும், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் நாச்சியார் செல்வநாயகம், எழுத்தாளர்களான கோப்பாய்சிவம், நீர்வைமணி கு.தியாகராஜக்குருக்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம்.

## 'கல்வி அபிவிருத்திப் பயணம்' நூல் அறிமுகச் செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

கல்வி அபிவிருத்திப் பயணம் நூல் அறிமுகச் செயலமர்வு நாளை சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வில் பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள், மேற்பார்வையாளர்கள் ஆகியோரை தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. அ.வேதநாயகம் கேட்டுக் கொண்டுள்ளார். (ஓ-6)

## ஆன்மீக நிகழ்வு

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வசந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரமத்தின் சைவகலை பண்பாட்டுப் பேரவையினால் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடாத்தப்பட்டு வரும் ஆன்மீக நிகழ்வு தொடரில் இன்று மு.ப.10.30மணியளவில் "இலக்கியம் காட்டும் வாழ்க்கை நெறி" எனும் விடயம் பற்றி யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ பீட மாணவன் ரி.ஹர்ஷன் ஆன்மீக சொற்பொழிவாற்றுவார். (ஓ-35)

# யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் நடத்தும் மாபெரும் தாச்சிச் சுற்றுப்போட்டி

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் நடத்தும் மாபெரும் தாச்சிச் சுற்றுப்போட்டி நாளை சனிக்கிழமையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் காலை 8.30 மணிக்கு சுதுமலை ஐங்கரன் வி.கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் நாளை நடைபெறவுள்ள போட்டியில் தையிட்டி ஈஸ்வரி வி.கழகம் எதிர் சுதுமலை யுவசக்தி வி.கழகமும், மானிப்பாய் வெஸ்ரோம் வி.கழகம் எதிர் பண்டத்தரிப்பு விநாயகர் (பி) வி.கழகமும்,நவாலி சென்றோக் வி.கழகம் எதிர் தாவடி காளி அம்பாள் வி.கழகமும், சுதுமலை நியூ புவனேஸ்வரி அம்பாள் வி. கழகம் எதிர் கைதடி வளர்மதமி வி.கழகம், சண்டிலிப்பாய் சிவசக்தி வி.கழகம் எதிர் கைதடி குமரநகர் வி.கழகமும், கோண்டாவில் மறுமலர்ச்சி வி.கழகம் எதிர் கைதடி சரஸ்வதி வி. கழகமும், அரியாலை காந்தி வி.கழகம் எதிர் சுன்னாகம் காந்தரூபன் (பி) வி.கழகமும் மோதவுள்ளன.

நாளை மறுதினம் நடைபெறவுள்ள போட்டியில் சுதுமலை ஐங்கரன் வி.கழகம் எதிர் இணுவில் அறிஞர் வி.கழகமும், கைதடி குமரகுரு வி.கழகம் எதிர் மயிலிட்டி கண்ணகி வி.கழகமும், இணுவில் கலாஜோதி வி.கழகம் எதிர் மயிலிட்டி ஒற்றுமை வி.கழகமும், ஆலடி, உடுவில் சிந்து வி.கழகம் எதிர் சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் வி.கழகமும், இணுவில் அண்ணா வி.கழகம் எதிர் மயிலிட்டி நியூ ஒற்றுமை (பி) வி.கழகமும், பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் வி.கழகம் எதிர் அளவெட்டி பாரதி வி.கழகமும், மயிலிட்டி நியூகிற் வி.கழகம் எதிர் கொக்குவில் காந்திஜி வி.கழகமும் மோதவுள்ளன. (ஓ-2)

## மெய்வல்லுநர் போட்டி

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி ஆரம்பப் பிரிவின் மெய்வல்லுநர் போட்டி எதிர் வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் ஆரம்பப் பிரிவு பகுதி தலைவர் திருமதி அ.சிவராமலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்லூரியின் ஓய்வுபெற்ற முன்னாள் பகுதித் தலைவர் திருமதி ஆர். யோசேப் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ஓ)

# இலங்கையில் தமிழர் 89

**ஹெள மக்களும் தமிழ் மக்களும்**
**பொ.ஆ.300-900**

உத்தரதேசத்தைப் பற்றிய குறிப்புக்களை ஆய்வு செய்தால் அப்பிரதேசம் ஏனைய பிரதேசங்களை விட வேறுபட்டதாக இருந்தது என்பதை அறியலாம். அனுராதபுரத்து மன்னர்கள் கட்டுப்பாட்டுக்குள் அடங்காத ஒரு பிரதேசமாகப் பலமுறை அதனைக் காணலாம்.

அனுராதபுரத்தின் ஆட்சியை எதிர்த்தோர் அங்கு ஆதரவு பெற்றதையும் காணலாம். முற்பட் நூற்றாண்டுகளில் போலல்லாது, ஆறாம் நூற்றாண்டின் பின் தென்னிந்தியாவிலிருந்து வந்த படைகள் வட பகுதியில் வந்திறங்குவதையும் அவதானிக்க முடிகின்றது. அப்படி வந்த படைகள் வடக்கில் தங்கள் அதிகாரத்தை உறுதிப்படுத்திய பின் அனுராதபுரத்தை நோக்கி முன்னேறின. இவற்றை நோக்குமிடத்து அனுராதபுரத்து ஆட்சியாளருக்குச் சாதகமான சூழ்நிலை வட பகுதியில் நிலவவில்லை என்பதில் தெளிவு.

**பல்லவர் தொடர்பு**

ஏழாம் நூற்றாண்டின் தொடக்கக் கட்டத்தில் ஸிலாமேக வண்ணமன்னன் (619-628) அனுராதபுரத்தில் ஆட்சி நடத்திய போது ஸிரிநாக என்பான் தமிழர் படை ஒன்றின் உதவியுடன் அனுராதபுரத்து மன்னனைத் தாக்கி அரசைக் கைப்பற்ற முயன்றான். அவனுடைய படை உத்தரதேஸத்திலிருந்தே தெற்கு நோக்கி அனுராதபுரத்துக்கு முன்னேறியது.

ஆட்சியைக் கைப்பற்ற எண்ணிய தலைவன் ஒருவன் வட பகுதியிலிருந்து படை கொண்டு சென்றமை கவனிக்கத்தக்க ஒரு நிகழ்ச்சியாகும். இதன் பின் அடிக்கடி இப்படியான நிகழ்ச்சிகள் வடக்கிலிருந்து நடைபெற்றன. இவற்றுள் மிகவும் முக்கியமானது பல்லவப் பேரரசர் உதவியுடன் மானவர்மன் என்ற சிங்கள இளவரசன் நடத்திய படையெடுப்புகள் எனலாம். இக்காலத்து அரசியல் குழப்ப நிலையை விளங்கிக் கொள்ளவும், இதில் உத்தரதேஸ கொண்டிருந்த பங்கினை மதிப்பிடவும் மானவர்மன் படையெடுப்புகள் உதவுகின்றன.

அனுராதபுரத்தில் 650தொடக்கம் 659 வரை ஆண்ட இரண்டாம் கஸ்ஸப மன்னனின் மகனாகக் கருதப்படும் மானவர்மன் தந்தை இறந்தபோது ஏற்பட்ட அரசியல் குழப்பங்களின் விளைவாக அனுராதபுரத்தை விட்டு ஓடி ஒளித்தான். இப்படியாக உரிமையிழந்த இளவரசர்கள் அனுராதபுரத்தை விட்டு ஓடி ஒளிவது எந்தவகையிலும் புதிய நிகழ்ச்சி அன்று. அப்படி ஓடும்போது பொதுவாக இளவரசர்கள் தெற்கு நோக்கி மலைப்பிரதேசத்துக்கு அல்லது அப்பால் ரோஹணத்துக்குச் செல்வதே வழக்கம்.வழமைக்கு மாறாக மானவர்மன் வடக்கு நோக்கி ஓடி உத்தரதேஸத்தில் அடைக்கலம் புகுந்தான். இதற்கு ஒரு காரணம் இருந்திருக்க வேண்டும். வடபகுதி இவனுக்குக் கூடுதலான பாதுகாப்பைக் கொடுத்தமை காரணமாகலாம். ஆனால் அவன் அங்கு இருப்பதை அனுராதபுரத்தில் ஆட்சி நடத்திய ஹத்த தாட்ட அறிந்து அவனைக் கைப்பற்ற முயன்றபோது, மானவர்மன் வட பகுதியை விட்டுப் பல்லவ அரசுக்குச் சென்று பல்லவப் பேரரசின் பாதுகாப்பைப் பெற்றான்.

மானவர்மன் இலங்கையின் வடபகுதியில் அடைக்கலம் புகுந்தமைக்கும், பின்னர் ஆபத்துத் தோன்றியபோது அங்கிருந்து காஞ்சிக்குச் சென்றமைக்கும் பல்லவர் செல்வாக்கு வடபகுதியில் பரவியிருந்தமை காரணமாக இருந்திருக்கும் எனக் கொள்ளலாம். அவன் அனுராதபுரத்தை விட்டு ஓடு முன்னரே பல்லவர்களுடைய தொடர்பு அவனுக்கு இருந்திருக்கும். இக்காலப் பகுதியில் பல்லவர் வடபகுதியில் ஓரளவு ஆதிக்கம் பெற்றிருந்தனர் என்று சந்தேகிக்க இடமுண்டு. எப்படியும் வட பகுதியில் காணப்பட்ட அரசியல் நிலை பல்லவருக்குச் சாதகமானதாக இருந்திருக்கும் என்று தோன்றுகிறது. முன்னர் கூறியதுபோல, ஆறாம் நூற்றாண்டின் இறுதியில் ஆட்சி நடத்திய பல்லவ மன்னன் சிம்ம விஷ்ணு இலங்கையை வெற்றி கொண்டதாகத் தென்னிந்தியக் கல்வெட்டுச் சான்று உள்ளது. அவன் காலத்திலிருந்து வடபகுதியில் பல்லவர்களுடைய செல்வாக்கு இருந்தது எனலாம். இத்தகைய பின்னணியிலேயே தான் பல்லவ அரசிலிருந்து மஹாயான பௌத்தம், கட்டட சிற்பக் கலைகள், கிரந்த எழுத்து முறை மற்றும் வணிக கணங்களின் வர்த்தகம் ஆகியவற்றின் செல்வாக்கு வட கிழக்கு இலங்கையில் மிகுந்து காணப்பட்டது.

பல்லவர் தலைநகராகிய காஞ்சியில் மானவர்மன் பல ஆண்டுகள் தங்கியிருந்தான். அங்கிருந்த காலத்தில் பல்லவர் தங்கள் பகைவர்களாகிய சாளுக்கியருக்கு எதிராக நடத்திய போர்களில் பல்லவருக்கு உதவினான். இறுதியில் முதலாம் நரசிம்மவர்மன் (630-668) கொடுத்த படை உதவியுடன் அனுராபுரத்தில் தான் இழந்த அரசுரிமையைப் பெற முயன்றான்.

மானவர்மனின் படை வெற்றிகரமாக எதிர்ப்பின்றி அனுராதபுரத்தை நோக்கிச் சென்றபோதும் திடீரெனப் படையெடுப்பை நிறுத்திக் காஞ்சியிக்கு திரும்பவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இதற்குக் காரணம் காஞ்சியில் பல்லவ மன்னன் நரசிம்மவர்மன் நோயுற்றிருந்தமை என அறிகின்றோம்.

காரணம் எது வாக இருந்தாலும் பல ஆண்டுகளுக்குப் பின் தன் உரிமையைக் கோருவதற்குத் தமிழ்நாட்டு மன்னன் ஒருவன் உதவியைப் பெற்று மானவர்மன் எடுத்த முதலாவது முயற்சி பலனில்லாது முடிவடைந்தது. காஞ்சிக்குத் திரும்பிச் சென்ற மானவர்மன், மேலும் பல ஆண்டுகள் காத்திருந்து இறுதியில் இரண்டாம் நரசிம்மவர்மன் ஆட்சியின் போது படையெடுத்து வந்து வட பகுதியில் தன் நிலையை வலுப்படுத்தி அனுராதபுரத்தை நோக்கி முன்னேறினான்.

அனுராதபுரத்தில் அக் காலகட்டத்தில் பொத்தகுட்டன் என்னும் தமிழ்த் தலைவன் மிகுந்த அரசியல் ஆதிக்கத்துடன் ஹத்த தாட்ட என்பவனை மன்னனாக நியமித்து வலுவுடன் நிர்வாகம் நடத்திக் கொண்டிருந்தான். மானவர்மன் படை அனுராதபுரத்தை அடையுமுன் பொத்தகுட்டனுடன் ஹத்ததாட்டனும் வடக்கு நோக்கிச் சென்று மானவர்மனை எதிர்த்தனர். ஆனால் பல்லவப் படையை இவர்களால் வெற்றிகொள்ள முடியவில்லை. இருவரும் கொல்லப்பட்ட பின் 684 இல் மானவர்மன் அனுராதபுரத்தில் மன்னனாக முடிசூட்டிக் கொண்டான்.

பேராசிரியர்
**கா. இந்திரபாலா**

பல்லவர் படைகள் வடபகுதியில் வந்திறங்கிய நிகழ்ச்சிகளும் பல்லவர் ஆதரவைப் பெற்ற சிங்கள இளவரசன் ஒருவன் அனுராதபுரத்தில் ஆட்சி பெற்ற நிகழ்ச்சியும் இக் காலத்து வரலாறறையும் வடக்கு இலங்கையின் அரசியல் நிலையையும் விளங்கிக் கொள்ள முக்கியமானவை. ஆறாம் நூற்றாண்டின் பின்னர் தமிழ்நாட்டில் பல்லவப் பேரரசும் பாண்டியப் பேரரசும் எழுச்சிபெற, அவற்றுக்கு அண்மையில் இருந்த வடக்கு இலங்கை, தெற்கு இலங்கையைக் காட்டிலும், கூடுதலான தமிழ்ச் செல்வாக்குக்கு இலக்காகியது. (தொடரும்)

# உலக மக்களைக் கவர்ந்த ஒபாமா

## அடிமைச் சந்தையிலிருந்து வெள்ளை மாளிகை வரை

செப்.11 இன் பின் அரபுகளுக்கு யு.எஸ் இல் ஒரு நண்பர்கூட கிடையாது.ஆனால் இஸ்ரேலியர்களுக்கு அங்கு நிறைய நண்பர்கள் உள்ள. வோஷிங்டனின் அட்டவணையில் மத்திய - கிழக்கு அமைதி முயற்சிக்கு ஒபாமா முன்னுரிமை கொடுப்பார். ஆனால் ஒபாமா இஸ்ரேலியர்களை, பயன்தரக்கூடிய மிகவும் அவசியமான நடவடிக்கைகளை எடுக்குமாறு தூண்ட வேண்டும். அதாவது இஸ்ரேல், கிழக்கு ஜெருசேலம் உட்படப் பிடித்து வைத்துள்ள எல்லா அரபு நிலங்களிலிருந்தும் வெளியேற வேண்டும் ஆக, இது நடக்கும் என்று உலகம் நம்புகிறது. ஆனால் இது பெரிய ஏமாற்றமாகத் தான் முடியும்.


◆ ரஷ்யாவுடனான மேலை நாடுகளின் உறவுகள் போகப் போக சீர்கெடும் நிலையிலுள்ளது. மொஸ்கோவிடம் மண்டிக்கிடக்கும் காஸ், பெற்றோல் போன்ற எரிபொருட் செல்வங்களைப் பயன்படுத்தி அது அயல் நாடுகள் மீது தனது ஆக்கிரமிப்பு வேலைகளைச் செய்யலாம். இராணுவத்தலையீடு முடி யாத பட்சத்தில் அமெரிக்காவால் இதற்கு எதிராக எதையும் செய்ய முடியாது.

◆ எரிபொருளின் பிரச்சினை மோசமான கட்டத்தை அடைந்துள்ளது. இப்பொழுது உலக சந்தையில் தற்காலிகமாக அதன் விலை இறங்கு முகமாக இருப்பினும் உலகில் விரைவாக எரிபொருளின் நிரம்பல் குறைந்து கேள்வி அதிகரித்து விலை கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

◆ காலநிலை மாற்றம் பற்றி உலகம் கொண்டுள்ள அக்கறையை உதாசீனப்படுத்தி எதுவும் செய்ய புஷ் மறுத்துவிட்டார். ஆனால் புதிய அதிபர் ஒபாமா ஊக்கமூட்டும் பல பேச்சுகள் மூலம் தான் கொண்டுள்ள அக்கறையை வெளிப்படுத்தி புதிய எரிபொருள் மூலங்களைக் கண்டறியும் ஆவல் கொண்டுள்ளார். காலநிலை பற்றிய அவர் கொள்கை அவரின் புகழை உயர்த்தும். ஆனால் எரிபொருள் தட்டுப்பாடு அதிக விலை கொடுத்து பேரம்பேசுபவர்களால் மேலும் சிக்கல்களை உருவாக்கும்.

◆ பாகிஸ்தான் பயங்கரமான பிரச்சினைகளை உருவாக்கப் போகிறது. அவற்றிற்கு யாராலும் நிலையான தீர்வை முன்வைக்க முடியாது.

அந்நாட்டின் புதிய மக்கள் ஆட்சி மிக விரைவில் கவிழும். இராணுவத் தளபதி கள் மீண்டும் நாட்டை தங்கள் கட்டுப்பாட்டுக் குள் கொண்டு வரும் சாத்தியக் கூறுகள் நிறைந்துள்ளன. பாக். இராணுவம் ஒன்று தான் அந்நாட்டின் ஸ்திரமான நிறுவனம். அணுவாயு தங்களை தயார் நிலையில் வைத் துக்கொண்டு இந்தியாவுடன் போருக்கு கங்கணம் கட்டி மயிரிழையில் ஊசலாடிக் கொண்டு நிற்கும் பாகிஸ்தானை எவ்வாறு சமாளிப்பது என்பது பற்றி ஒபாமா விரைவில் முடிவு எடுக்க வேண்டும்.



குடும்பத்தினருடன் ஒபாமா

புத்தி சுவாதீனமான எவனும் பாகிஸ்தானில் யு.எஸ் இராணுவரீதியாக தலையிட வேண்டும் என்ற நிலைப்பாட்டை எடுக்கமாட்டான். ஆனால் அந் நாட்டின் உட்கட்டுக்கோப்பு உடைந்து போவதைத் தடுக்கும் வண்ணம் ஒபாமா முடியுமான எல்லா உதவிகளையும் செய்ய வேண்டியுள்ளது. தவறின் ஆப்கானிஸ்தானில் நேட்டோ நாடுகளின் நிலை அவலத்துக்குள்ளாகலாம்.

*1. அல்கொய்தா எந்த நேரத்திலும் அமெரிக்கா மீது பாரிய பயங்கரவாதத் தாக்குதலை மேற்கொள்ளலாம். இது செப்.11 இற்குப் பின் அமெரிக்க மக்கள் உணர்ச்சிவசப்பட்டு எவ்வாறு பிரச்சினையை எதிர்கொண்டார்களோ அவ்வாறான நிலை மீண்டும் உருவெடுக்கலாம். அப்போது ஒபாமாவின் கொள்கை மாறவும் கூடும்.*

*2. ஈரான் பயங்கரமான பிரச்சினையாக ஒபாமாவின் முன் நிற்கிறது. பேசித்தான் அதனை வழிக்குக் கொண்டுவரவேண்டும் என்பதில் ஒபாமா உறுதியாகவுள்ளார்.*

மேல்போந்த பிரச்சினைகளைச் சுமந்து கொண்டு எப்படி ஒரு மனிதன் வெள்ளை மாளிகையில் குடியிருக்கப் போகிறார் என்று நாம் ஆச்சரியப்படக்கூடும்.. ஒபாமா மிக மோசமான காலகட்டத்தில் பதவியேற்றுள்ளார். அவர் சுயகட்டுப்பாடும் ஒழுக்கமும் உடைய மனிதன். தகாத விதத்தில் தவறியும் கால் பதிக்காதவர். தேர்வுக் களத்தில் அவர் காட்டிய நேர்மை **8** இதற்குச் சான்று. அவ்வாறே அவர் வெள்ளைமாளிகையிலும் தொடர்வார் என்பதில் சந்தேகமில்லை. பலரிடம் அவர் பிராங்கிளின் ரூஸ்வெல்ற் போன்று நாட்டை முன்னெடுத்துச் செல்வாரா அல்லது பேசிப் பேசிக் காலத்தை கடத்துவாரா? என்ற சந்தேகம் எழாமலில்லை.

முன்னர் அரசுகள் சாதிக்க முடியாதவற்றை பன்னாட்டு வியாபார நிறுவனங்கள் சாதித்தன. ஆகவே "சந்தை அரசுகள்" என்று குறிப்பிடப்படும் கடந்தகால அர சாங்கங்கள் பெரும் வியாபாரக் கம்பனிகளின் ஆதிக்கத்திலிருந்தன. அவை தேசிய அரசுகளைப் புறந்தள்ளி தங்கள் தலைமைத்துவத்தை நிலைநாட்டின.

இதன் விளைவுதான் மாட்ஓவ் என்ற அமெரிக்க நிதியாளர் போன்றவர்கள் பல அரசுகளையும் தனியாளர்களையும் ஏமாற்றி முதலீடுகளை ஏப்பம் விட்ட கதை இன்னும் முடியவில்லை.

கடந்த சில மாதங்களின் நிகழ்வுகள் மேற்கூறிய சந்தைஅரசு கருதுகோளை தூக்கியெறிந்துவிட்டன. சந்தையாளர்கள் எம்மை படுகுழியில் மாட்டியுள்ளனர். அதிலிருந்து எம்டை மீட்கும் ஆற்றலும் அதிகாரமும் தேசிய அரசுகளிடம் தான் உள்ளன. அரசுகளுக்குள் அமெரிக்காவின் அரசுதான் உலக முக்கியத்துவம் பெறுகின்றது. அது வெற்றியும் பலமும் உடையதாக இருத்தல் இன்றியமையாதது.

**ஜம்பொன்**

ஆகவேதான் அதன் அதிபர் மிகவும் முக்கியத்துவம் பெறுகிறார். ஒபாமா, தான் எதிர்நோக்கும் அத்தனை பிரச்சினைகளையும் வெற்றிகொள்ள வேண்டும் என்று அமெரிக்கர்கள் மாத்திரமின்றி உலகு எங்கும் உள்ள மக்கள் பிரார்த்திக்கின்றனர். (தொடரும்)

# எதிர்காலம் குறித்து ஏங்கும்

# நலன்புரி முகாம்களிலுள்ள வன்னி மக்கள்

**மோதல்கள் காரணமாக அரச கட்டுப்பாடற்ற பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து வவுனியா நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள வன்னி மக்களின் நிலைமைகளை அறிந்து கொள்வதற்காக ஊடகவியலாளர்கள் கடந்த வாரம் அங்கு விஜயம் செய்தனர்.**

**அங்கு சென்ற ஊடகவியலாளர்களிடம் மக்கள் தமது உள்ளக்குமுறல்களைத் தெரிவித்தனர். அவை அவர்கள் தெரிவித்த மொழிநடையிலேயே இங்கு தரப் படுகின்றது.**

**அத்துடன் மக்களின் வேதனைகள் குறித்து ஊடகவியலாளர்கள் வினவிய கேள்விகளுக்கு அரச அதிபரும், இராணுவப்பேச்சாளரும் கூறிய விளக்கங்களும் தொகுத்துத்தரப்படுகின்றது.**

வன்னிப் பகுதியில் யுத்த நிலை உச்சக் கட்டத்தை அடைந்துள்ள நிலையில் கடந்த இரண்டு வருடகாலமாக தொடர்ச்சியாக பாதிக் கப்பட்டுள்ள இம்மக்களில் ஒரு பகுதி யினர் கடந்த ஒருசில மாதப் பகுதிக்குள்ளாக அரச கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் வந்துள்ளனர்.



வன்னியில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த 32ஆயிரத்து 597 பேர் வவுனியாவிலுள்ள 13 முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளதாக வவுனியா அரசாங்க அதிபர் பி.எஸ்.எம்.சாள்ஸ் தெரிவித்தார்.

*உயிர்பிழைத்தால் மட்டுமே போதும்* என்ற நோக்குடன் வவுனியாவிற்குள் வந்துள்ள மக்களை திறந்த வெளிச்சிறையைப் போன்று அடைத்துவைத்துள்ளதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அண்மையில் பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் இடம் பெற்ற செய்தியாளர் மாநாட்டில் குற்றஞ் சாட்டியிருந்தது.

இதற்கு பதிலளித்த அரசாங்கம் இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதிகளில் இருந்துவரும் மக்களோடு சேர்ந்து விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களும் ஊடுருவியுள்ளமை காரணமாகவே பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பலப்படுத்த வேண்டிய தேவை அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்திருந்தது.

இந் நிலையில் கடந்த வாரத்தில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான விவகாரங்களுக்கான செயலாளர் சேர் ஜோன் ஹோம்ஸ் இடம் பெயர்ந்துள்ள மக்கள் தொடர்பாக தமக்கு முக்கிய மூன்று கரிசனைகள் இருப்பதாகவும் அவற்றை நிவர்த்தி செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரியிருந்தார்.

இராணுவ கட்டுப்பாடற்ற பகுதியில் இருந்து வருகைதரும் மக்களை சோதனைக்குட்படுத்தி தகவல்களை அட்டவணைப் படுத்துவதில் பகிரங்கத்தன்மை பேணப்படல், இடம் பெயர்ந்த மக்கள் சுதந்திரமாக நடமாட அனுமதியளித்தல். மற்றும் மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ள முகாமிற்குள் இராணுவத்தினரின் பிரசன்னம் தவிர்க்கப்படல் ஆகிய தமது கரிசனைகள் தொடர்பிலேயே அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டிருந்தார்.

மேலும், இடம்பெயர்ந்துள்ள மக்கள் தங்க வைக்கப்பட்டுள்ள முகாம்களிற்கு சென்று பார்வையிட உள்நாட்டு வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் அழைத்துச் செல்லப்படவில்லை என குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்ட நிலையில் கடந்த திங்கட்கிழமை கொழும்பிலிருந்து சுமார் நாற்பது ஊடகவியலாளர்கள் அங்கு அழைத்துச்செல்லப் பட்டனர். வவுனியாவில் உள்ள மனிக்பாம் கதிர்காமர் நிவாரணக்கிராமம் மற்றும் அருவிக் கோட்டம் சிவானந்த வித்தியாலயம் ஆகிய இடம் பெயர்ந்தோர் தங்க வைக்கப்பட்டுள்ள முகாம்களுக்கு ஊடகவியலாளர்கள் அழைத்துச் செல்லப் பட்டனர்.

இதில் பெரிய முகாமாக திகழும் மனிக்பாம் கதிர்காமர் நிவாரணக்கிராமத்தில் 2 ஆயிரத்து 754 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இங்கு ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள 565 தற்காலிக குடியிருப்புகளிலும் குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ள நிலையில் தற்போது 150 தற்காலிக குடியிருப்புக்கள் அமைக்கப் பட்டு வருவதாக வவுனியா அரச அதிபர் குறிப் பிட் டார்.

ஊடகவியலாளர்கள் கதிர்காமர் நிவாரண முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டதும் அங்கு அரச அதிபர் பி.எஸ்.எம். சாள்ஸ் தலைமையில் ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்று இடம் பெற்றது.

இதன்போது முகாம் தொடர்பாக அரச அதிபர் விபரிக்கையில்,

உள்ளக இடம்பெயர்விற்கு உள்ளாகி வந்தவர்களுக்கு நாம் இந்த கதிர்காமர் நிவாரணக் கிராமத்தில் எம்மால் இயன்றவரையில் அதிக பட்சமாக எதை வழங்க முடியுமோ அத்தனை வசதிகளையும் வழங்கியுள்ளோம். இந்த இடத் தில் நாங்கள் அனைத்து அரசாங்க நிறுவனங்களையும் அமைத்துள்ளோம். பாடசாலை, சுகாதார மருத்துவ நிலையம், நடமாடும் சிகிச் சைப் பிரிவு, நிரந்தரமாகவே ஆயத்தத்துடன் நிறுத்திவைக்கப்பட்டுள்ள அம்பு



லன்ஸ் வாகனம், மருத்துவர்கள், பொதுச்சுகாதார பரிசோதகர்கள், தபால் நிலையம், வங்கிகள், கூட்டுறவு நிலையங்கள் சதோச, முன்பள்ளி, ஆயுள்வேத வைத்திய சாலை என அனைத்து வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம். நீங்களும் இதனைப் பார்க்க முடியும். நாங்கள் சமையலறை பொருட் களை வழங்குவதுடன் உலக உணவுத்திட்டத்துடன் இணைந்து உலர் உணவுப்பொருட்களையும் உப உணவுப் பொருட்களையும் வழங்குகின்றோம்.

முகாமில் உள்ளவர்கள் தற்போது தாமாகவே சமைக்கத்தொடங்கியுள்ளனர் அவர்கள் சில வாழ்வாதார பணிகளிலும் ஈடுபட்டுள்ளனர். தொழில்பயிற்சி நிலையமும் தையல் நிலையமும் இங்கு அமைக்கப்பட்டுள்ளன. அவர்கள் தமது உடைகளை தாமாகவே தைத்துக்கொள்கின்றனர். இங்குள்ளவர்களின் ஆன்மிகத் தேவை யைப்பூர்த்தி செய்வதற்காக ஏற்கனவே இந்து ஆலயத்தை அமைத்துள்ளோம்.

தற்போது கிறிஸ்தவ தேவாலயத்தை அமைக்கும் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டு விட்டன. இங்கு உளவள ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன. ஏனையோரின் ஆதரவு பெரிதுமின்றி அரசாங்கத்தினாலேயே இந்த மக்கள் பராமரிக்கப்படுகின்றனர். இதுதான் நாங்கள் எதிர்நோக்கியுள்ள பெரும் பணியும் சவாலுமாகும்.

இங்குள்ளவர்கள் ஏன் உறவினர்களை சந்திக்கவோ அன்றேல் வெளியே சென்று வரவோ அனுமதிக்கப்படுவதில்லை என ஊடகவியலாளர்கள் வினவியபோது பதிலளித்த அரச அதிபர் ,

வவுனியாவில் தற்போதுள்ள நிர்வாக கட்டமைப்பை சீர்குலைக்க நாங்கள் விரும்பவில்லை. ஏனெனில் வவுனியாவில் மிகுந்த கஷ்டமான சூழ்நிலையிலேயே நாம் சிவில் நிர்வாகத்தை முன்னெடுத்துச் சென்று கொண்டிருக்கின்றோம் என்பதை நீங்களும் அறிவீர்கள். அத்தோடு இடம்பெயர்ந்தவர்களது முகாம்களின் ஸ்திரநிலையையும் குலைக்க நாம் விரும்பவில்லை. ஆரம்ப நாட்களில் தினமும் வெளியார் வருவதற்கு நாங்கள் அனுமதித் திருந்தோம். அதன்பின்னர் சில விரும்பத்தகாத சம்பவங்கள் இடம்பெற்றன இதனைத் தொடர்ந்தே நாம் கட்டுப்பாடுகளைக் கொண்டுவர நேர்ந்தது என்றார். நலன்புரி முகாம் சென்று மக்களுடன் உரையாடிய போது கடும் மோதல்கள் நடைபெறும் பகுதிகளில் இருந்து உயிரோடு வந்து சேர்ந் ததே பெரும் விடயம் என அவர்கள் பெருமூச்சு விடுவதை உணரமுடிந்தாலும் உள்ளக் குமுறல்களும் உடனோடி வருகின்றது.

மோதல்கள் தீவிரமடைந்து செல்லச் செல்ல பின்தொடர்ந்துவந்த மரணநிழலுக்கு முன்பாக சென்று பாதுகாப்பை பெற்றுவிட வேண்டும் என இரண்டு வருடகாலமாகவே மாறி மாறி இடம்பெயர்ந்து இறுதியாக உயிரைத்தவிர அனைத்தையும் இழந்து வந்த மக்களது துயரக்கதைகளைக் கேட்டால் உருகாத உள்ளங்களும் உருகிவிடும் அல்லவா!

### இரு வருடங்களில் 14 தடவை இடம் பெயர்ந்தோம்

**ஜூலியட் (45 வயது)** மடுதான் எங்கட சொந்த ஊர். சண்டை ஆரம்பமானதும் எமது ஊரிலிருந்து இடம்பெயரத் தொடங்கினோம். தொடர்ச்சியாக குண்டுகளதும் துப்பாக்கிகளது சத்தமும் தான் எம்மோடு கூடவே வந்தன. தட்சணாமருதமடு, பெரியமடு, வெள்ளாங்குளம் இப்படியாக இடம்பெயர்ந்து இறுதியிலே இருட்டுமடுவிலே தங்கியிருந்தோம். அங்கே பங்கருக்குள்ளேயே இருந்தோம். பங்கருக்குள் இருந்து தலையை வெளியில் எடுத்தாலே ஆபத்து என்ற நிலை. உணவு சமைப்பதற்காக போவோம் என்று கூறி பங்கருக்குள் இருந்து வெளியேறி சில அடிகள் செல்வதற்குள்ளேயே ஷெல் துண்டுகள் பட்டு உயிரிழந்தவர்களை நாங்கள் கண்ணாலே கண்டோம். உடல்களை அடக்கம் செய்ய முடியாத நிலையில் பங்கருக்குள்ளேயே போட்டு விட்டு வந்து விட்டோம் கடந்த இரண்டு வருடகாலத்தில் 14 தடவை இடம் பெயர்ந்தே இறுதியாக இங்கு வந்துசேர்ந்தோம். இங்கே உணவும் அப்படி இப்படித் தான் பற்றாக்குறையாகவுள்ளது. எங்கள் உறவினர்கள் வுவுனியாவில் உள்ள போதும் அவங்க்ளைப் பார்க்க எமக்கு அனுமதியில்லை.

### எங்களுக்கு மட்டும் ஏன் இந்த நிலை?

**பேரம்பலவாணேஸ்வரக்குருக்கள்(58 வயது- ஸ்கந்தபுரம் கிளிநொச்சி)**

இந்த முகாமிற்குள் கிறிஸ்தவக்குருமார் இல்லை பௌத்த பிக்குகள் இல்லை. மௌலவிமார் இல்லை. ஆனால் சைவக்குருக் களான எங்களை இங்கு கொண்டுவந்து விட்டுள்ளனர். என்னைத்தவிர ஆறு சைவக் குருக்களின் குடும்பங்களும் இங்கே தங்க வைக்கப் பட்டுள்ளன. நாங்கள் மட்டும் ஆன் மிகவாதிகள் இல்லையா? ஏன் எமக்கு மட்டும் இப்படியான புறக்கணிப்பு. இங்கு தற்காலிக மாக கோவிலொன்றை அமைந்துள்ளனர். அது ஆகம விதிகளுக்கு எந்தவகையிலும் உட்படவில்லை விக்கிரகங்கள் இல்லை. நாங்கள் விக்கிரங்களுக்கு அன்றி தெய்வப்படங்களுக்கு பூஜைசெய்வது கிடையாது ஆனால் செய்யவேறுவழியின்றி படங்களுக்குப் பூசை செய்யவேண்டியநிலை ஏற்பட்டுள்ளது. இங்கிருந்து வெளியே போக வர முடியாது.

தொற்று நோய் பரவுவதாகக் கூறி அருகிலுள்ள (கல்லாறு) ஆற்றிலும் குளிப்பதற்கு சுகாதாரப்பிரிவினர் தடைவிதித்துள்ளனர். இங்கே ஒரே சொறியும் கடியுமாக இருக்கி றது. இலையான்களின் தொல்லையே பெருந் தொல்லையாக இருக்கு என்றார்.

**ம.ஈழவன்( 8வயது)**

நாங்கள் இங்கு வரமுன்னர் இருட்டு மடுவில் இருந்தோம். அங்கே கடைசியாக 20 நாட்கள் வரை பங்கருக்குள்ளேயே இருந்தோம் அந்த பங்கருக்குள்ளே 40 பேர் வரை இருந்தனர். நாங்கள் இருந்த பங்கருக்கு அருகிலும் ஷெல்கள் வந்து வீழ்ந்து வெடித்தன ஒரே சத்தம். காலையிலும் ஷெல்விழும் இரவிலும் விழும்.

### இந்தியா திரும்ப உதவி செய்யுங்கள்

**துர்க்காதேவி துரைரட்ணம் (44வயது)** நான் ஒரு இந்திய பிரஜை சொந்த ஊர் மதுரை. எனது கணவர் வடிவேல் துரைரட்ணம் (வயது 44) இலங்கையைச் சேர்ந்தவர் சுகவீனமுற்ற எனது கணவரின் தாயாரைப் பார்க்வென்று 2006ஆம் ஆண்டு மே மாதம் மூன்றாம் திகதி மதுரையில் இருந்து கிளி



நொச்சிக்கு பிள்ளைகளுடன் வந்தோம்.

ஆனால் சண்டை ஆரம்பித்ததால் அங்கு மாட்டிகொண்டோம். எங்களை இங்கிருந்து வெளியே அழைத்துச் சென்று இந்தியாவிற்கு அனுப்பிவைக்க தூதரக அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். துர்க்காதேவி துரைரட்ணம்.

மனிக்பாம் கதிர்காமர் நிவாரணக் கிராமத்தில் மாத்திரம் 430 மாண வர்கள் உள்ளதாக அரசாங்க அதிபர் சுட்டிக் காட்டிய நிலையில் மரநிழல்களில் தற்காலிகமாக நடத்தப் பட்டு வருகின்ற வகுப்புக்களை எம்மால் அவதானிக்க முடிந்தது. நாம் சென்ற தினம் சிவராத் திரி விடுமுறை தினமாக இருந்த போதும் சீருடைகளுடன் பல மாணவர்களைக்காண முடிந்தது.

### சுதந்திரமாக கற்க வேண்டும்

**தெய்வேந்திரன் துவாரகா (13 வயது)** எங்கட சொந்த ஊர் கிளிநொச்சி இரத்தின புரம். நாங்க மூன்றாவது தடவையாக இப்ப இடம்பெயர்ந்துள்ளோம். கிளிநொச்சியில் இருந்து கண்டாவளைபோய் அங்கிருந்து விசு



வமடு போனனாங்க. இப்ப விசுவமடுவில் இருந்து தான் கடைசியாக இங்கவந்தோம். எங்கட அப்பா கமம் தான் செய்தவர். அம்மா தைக்கிறவா வீட்டில அஞ்சாறு மாடு நிற்குது டிரக்டர்கள், மோட்டார் பைக்குகள் எல்லாம் இருக்கு டி.வி. எல்லாம் இருக்கு அதெல்லாம் விட்டுவிட்டுதான் வந்தனாங்க. எங்கட சொந்தக் காணிகளெல்லாம் இருக்கு. வீட்டில நல்ல தோட்டங்களெல்லாம் வைச்சிருந்தனாங்க. எல்லாம் விட்டுட்டுதான் வந்தனாங்க. அங்க ஸ்கூல்லயெல்லாம் நல்லா படிச்சனாங்க. எங்கட உயிரக்காப்பாற்ற வேண்டித்தான் இங்க வந்தனாங்க.

இங்க வந்தும் உள்ளுக்குள்ளேயே இருந்து படிக்கின்றதென்றா எங்களுக்கு விரும்பமில்லாமலிருக்கு. வெளியில போய்

(07ஆம் பக்கம் பார்க்க...)

# எதிர்காலம் குறித்து ஏங்கும்....

06ஆம் பக்கத் தொடர்ச்சி.....

சுதந்திரமாக இருந்து படிக்கோணும் என்கிறது தான் எங்கட ஆசை. எங்கட சித்தியாக்கள் வவுனியாவில் இருக்கினம். அவைகளோட போயிருந்து படிக்கத்தான் விருப்பம். இஞ்ச விடியல குளிக்கிறதெல்லாம் சரியான கஷ்டம். சரியான கிறவுட்டாக இருக்கும். மற்ற இங்கு சுற்றுச்சூழலெல்லாம் இலையான் கூலெல்லாம் கூட இதனால் சரியான வருத்தங்களெல்லாம் வருகுது.

ம.மயூரன் (15வயது)

"எங்க சொந்த இடம் கனகராயன் குளம். அங்க எங்களட்ட 100 மாடு இருந்திச்சு. அதெல்லாம் எங்க போயிருக்குமோ தெரியாது. எனக்கு மிகவிருப்பமான மாடு சுப்பிரியா அதை ஒரு நாளும் பார்க்காமல் இருந்ததில்லை. அதில்லாதது தான் எனக்கு பெரிய கவலையாக இருக்கு"

ஜே.ஷொஷிங்டன் (14 வயது)

பூநகரி பள்ளிக்குடாதான் எங்கட சொந்த ஊர். அங்கே எங்க வீட்டில இரண்டு படகுகளும் ஒரு சூசுகி எஞ்சினும் இருந்திச்சு. படகில் ஒன்று சீநோர் போட் மற்றது சுப்பர் போட் (படகு). இன்று எதுவுமே இல்லை.

## முகாமில் உள்ள மாணவர்களுக் கல்வி வழங்கமுயற்சிக்கிறோம்

பா.பிரபாகரன் தொண்டர் ஆசிரியர் (30 வயது)

"நான் நெடுங்கேணியைச் சேர்ந்தவன் அங்குள்ள பாடசாலையில் ஆங்கிலமும் விஞ்ஞாமும் படிப்பித்து வந்தேன். நெடுங்கேணியில் மோதல் ஆரம்பமானதும் அங்கிருந்து ஒட்டுசுட்டான் போய் மீண்டும் நெடுங்கேணி வந்தே இராணுவத்தினர் பகுதிக்கு சென்றோம். இந்த முகாமிலுள்ள மாணவர்களுக்கு கல்வி வழங்க எம்மால் இயன்றவரை முயற்சிக்கின்றோம். இங்கு 11 தொண்டர் ஆசிரியர்கள் அடங்கலாக 38 ஆசிரியர்கள் உள்ளனர். இங்குள்ள மாணவர்களில் புதிதாக வந்தவர்கள் எட்டுப்பாடத்தையும் ஒரே கொப்பியில் தான் குறிப்பெடுக்க வேண்டிய நிலை தற்போது காணப்படுகின்றது. அத்தோடு காலையில் குளித்துவிட்டு வருவதற்கு நேரம் எடுப்பதால் அனேகமான மாணவர்கள் நேரம் பிந்தியே வகுப்புகளுக்கு வருகின்றனர். இந்த குறைபாடுகள் தொடர்பில் அதிகாரிகள் கவனம் செலுத்துவார்கள் என நான் நம்புகின்றேன்.

யோகராசா (53 வயது)

நாங்க புளியம்பொக்கணையைச் சேர்ந்தவங்க. எங்களுக்கு கமத்தொழிலைத் தவிர வேற தொழில் தெரியாது. ஊருக்கு போய் மீண்டும் எங்கட தொழிலை செய்யணும் அதுதான் எங்கட கோரிக்கை. எங்கட சொந்தக்காரங்க வவுனியாவில் இருக்கிறாங்க. எங்களை அங்க போகவிட்டால் நிலைமை ஓரளவு சரியாகிடும். அத்தோட தொழில் செய்யமுடியாததால் எங்களிட்ட ஒரு சதமும் எங்களுக்கு என்று இல்லை. வெளியால போனா ஏதேனும் தொழில் செய்தாவது பிழைத்துக்கொள்ள முடியும் என்றார்.

ஊடகவியலாளர்கள் முகாம் பகுதிக்கு வந்துள்ளனர் என்பதை அறிந்து கொண்ட பல இளைஞர்களும் ஒரு சில வயோதிபர்களும் தாமாகவே முன்வந்து தமது குறைபாடுகளை கூற முனைந்தனர்.

அப்போது முகாமைச் சுற்றிலும் முட்கம்பிச்சுருள்கள் போடப் பட்டிருந்ததாகவும் ஊடகவியலாளர்கள் வருகைதந்துள்ளதன் காரணமாகவே சில முட்கம்பிச்சுருட்கள் அகற்றப் பட்டுள்ளதாகவும் பெயர்களை இனங் காண்பித்துக்கொள்ளவிரும்பாத பலர் தெரிவித்தனர். விரல் விட்டு எண்ணக் கூடியவர்கள் மட்டுமே புதிதாக வருகின்றவர்களுக்காக கொட்டில்களை அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். மாறாக அதனை தொழில் என்று கூற முடியாது. இங்குள்ளவர்களை வெளியே சென்றுவர அனுமதித்தால் அவர்கள் எதையாவது சம்பாதித்துவரமுடியும்.

ஆனால் வெளியே செல்ல அனுமதி கிடையாது. ஆரம்பத்தில் ஒரு சில நாட்கள் உறவினர்களைப் பார்வையிட அனுமதியிருந்ததெனினும் அது தற்போது முற்றாக நிறுத்தப்பட்டுவிட்டது. நாம் இங்கு வரும்போது எம்முடன் எதையுமே எடுத்துவரவில்லை. உயிர் பிழைத்தால் போதும் என்று பிள்ளைகளையும் உறவுகளையும் மட்டுமே சுமந்துவந்தோம். அதிலும் சில உறவினர்கள் வேறு வேறு முகாம்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். இங்குள்ளவர்களின் உறவினர்கள் பலர் வவுனியாவில் உள்ளனர். அங்கு செல்ல அனுமதித்தாலே எமது நிலை ஓரளவு மேம்பட்டுவிடும் என அவர்கள் கூறினர்.

## இராணுவப் பேச்சாளரின் வியாக்கியானம்

தம்மை வவனியாவிலும் ஏனைய பகுதிகளிலும் உள்ள உறவினர்கள் கூட வந்து பார்க்க முடியாத நிலை காணப்படுவது மட்டுமன்றி வெளியே சுதந்திரமாக சென்று வரத் தடை விதிக்கப் பட்டுள்ளது இவ்வாறு பல்வேறு கட்டுப்பாடுகள் போடப்பட்டுள்ளதாக முகாமில் உள்ளவர்கள் பொதுவாக கூறியுள்ளமை பற்றி இரா்ணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்காரவிடம் வினவிய போது அதற்கு அவர் பதிலளிக்கையில்,

இங்குள்வர்கள் அண்மையிலேயே இங்கு வந்து சேர்ந்துள்ளனர். அவர்களை நாம் குடியமர்த்தியுள்ளோம். முன்னதாக இவர்கள் தற்காலிக இடைத்தங்கல் நிலையங்களிலும் பாடசாலைகளிலும் பல்வேறு இடங்களிலும் தங்கவைக்கப்பட்டிருந்தனர். இவர்களுக்கு தற்போது நாம் குடும்பமாக வாழக் கூடியதாக எம்மால் செய்யமுடியுமான ஏற்பாடுகளைச் செய்து வழங்க முடியுமான வசதிகளை வழங்கி ஏதோ ஒருவகையான தங்குமிடத்தை கொடுத்துள்ளோம்.

இங்குள்ளவர்கள் விடுதலைப்புலிகளின் பகுதிகளிலிருந்து வந்துள்ளனர். பலர் விடுதலைப்புலிகளுக்கு தெரியாமல் இங்கு வந்துள்ளனர். அந்த வகையில் விடுதலைப் புலிகள் ஏதோவிதமான சேதங்களை திட்டமிட்டு செய்ய முனையக் கூடும். அவர்கள் இந்த முகாம்பகுதியிலே ஏதே னும் செய்யுமிடத்து அதற்கு அரசாங்கமும் நாமுமே பொறுப்பாளிகளாக நேரிடும்.

அவர்கள் செய்யக்கூடிய சிறிய சேதங்கள் கூட உதாரணத்திற்கு ஒரு குழந்தைக்கு சேதத்தை உண்டுபண்ணினால் அன்றேல் யாரிற்கேனும் காயத்தை ஏற்படுத்தினால் இல்லாவிடின் ஒரு குண்டை வெடிக்கவைத்தால் அது எமது பொறுப்பாக மாறிவிடும்.

அந்தவகையில் அப்படியான சம்பவங்கள் நடப்பதை நாம் விரும்பவில்லை இதுவே வெளியாரை உள்ளே அனுமதிக்காமைக்கான எமது பிரதான காரணமாகும். இதனைத் தவிர வெளியாரை அனுமதிக்கும் போது விரும்பத்தகாத பல சம்பவங்கள் இடம் பெறக் கூடும். அரச அதிபர் சுட்டிக்காட்டியதைப் போன்று ஆரம்பத்தில் வெளியாரை இங்கு பார்வையிட அனுமதித்த போது அவர்கள் சட்டவிரோத மதுபா்னம் மற்றும் தேவையற்ற வேறு பொருட்களைக் கொண்டு வந்தனர்.

இவற்றின் காரணமாக இந்த முகாமிற்குள் பிரச்சினைகள் ஏற்பட்டன. இங்கு பெரும் சமூகமாக மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். இங்கு குழப்ப நிலையை ஏற்படுத்தாமல் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எமக்குள்ளது. இதுவும் வெளியாரை உள்ளே அனுமதிக்காமைக்கும் இங்கிருப்போரை வெளிச் செல்ல தடைவிதிப்பதற்குமான காரணங்களாகும்.

ஆனால் நிச்சயமாக நாம் இங்குள்ளவர்களின் தேவைகளைக்கருத்தில் கொண்டு அவர்கள் தகவல்களை சரியாக வழங்குமிடத்து வெளியே செல்லவேண்டிய அத்தியாவசிய தேவையிருப்பின் அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய முடியும். இன்னுமொரு விடயம் யாதென்றால் இங்குள்ளவர்கள் வெளியே சென்று ஏதேனும் நடந்தால் அதற்கும் நாமே பொறுப்புக் கூறவேண்டிய நிலையிலுள்ளோம். உங்களிடம் இவ்வளவதிகமானோரின் பெயர்ப்பட்டியலுள்ளது.

ஆனால் இவர் களைக் காணவில்லை. எங்கே அவர்கள் என எம்மைப்பார்த்து கேள்வியெழுப்பக்கூடும். அந்த வகையில் நாம் இவற்றிற்கெல்லாம் பதிலளிக்கக்கூடியவர்களாக இருக்க வேண்டும். இங்குள்ளவர்கள் தங்கவைக்கப்பட்டு சிறிது காலம் சென்ற பின்னர் நாம் ஏற்பாடுகள்யாவற்றையும் செய்து முடித்த பின்னர் நிச்சயமாக நாம் அவர்களை வெளியே செல்ல அனுமதிப்பது மட்டுமன்றி வெளியார் உள்ளே வரவும் வழி வகைசெய்வோம் என்றார்.

இந்த முகாம்வளாகத்திற் குள்ளாக இராணுவத்தினரின் பிரசன்னம் காணப் படுவதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றனவே தற்போது எம்மால் கூட இராணுவத்தினரின் பிரசன்னத்தை அவதானிக்க முடிகின்றதே என பிரிகேடியர் உதய நாணயக்காரவிடம் வினவியபோது,

தற்போதைய நில்லயில் இங்கு காணப்படும் இராணுவத்தினரது பிரசன்னம் எமது பாதுகாப்பிற்காகவே. விசேட விதமாக எமது பாதுகாப்பிற்காகவும் இங்கு வந்துள்ள ஊடகவியலாளர்களின் பாதுகாப்பிற்காகவுமே யாகும். இந்த முகாம் தொகுதியின் பாதுகாப்பு முழுமையாக பொலிஸாரின் பொறுப்பிலேயே கையளிக்கப்பட்டுள்ளது. முகாமின் உட்பகுதிக்கும் இராணுவத்தினருக்கும் எவ் வித தொடர்பும் கிடையாது. மாறாக இராணுவத்தினரோ முகாமிற்கு வெளியேயுள்ள பகுதிகளைப்பாதுகாத்து வருகின்றனர். தற்போது இங்கு இராணுவத்தினர் பிரசன்னமாகியிருப்பது நாம் வருகைதந்துள்ளமையாலும் ஊடகவியலாளர்கள் வருகை தந்துள்ளமைக்கு பாதுகாப்பை பெற்றுக்கொடுக்கவும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவதற்காகவுமே.

வன்னிப்பகுதியில் இருந்து வந்த மக்களுடன் மக்களாக விடுதலைப்புலிகளும் ஊடுருவி வந்துள்ளதை நாங்கள் அறிவோம்.

இந்த முகாமிற்குள் இருப்பவர்களில் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்தவர்களென சந்தேகிக்கப்படும் பல நூறு அங்கத்தவர்களும் உள்ளனர். அவர்களில் பலர் அதை ஒப்புக்கொண்டும் உள்ளனர்.

ஆனால் அவர்கள் புனர்வாழ்வு பெறட்டும் எனக்கருதி ஒன்றும் செய்யாது விட்டுள்ளோம் என்றும் இராணுவப் பேச்சாளர் கூறினார்.

அரிசி, மா, சீனி, பருப்பு போன்றவை தமக்கு தற்போது மாதம் ஒரு முறை ஒட்டு மொத்தமாக வழங்கப் படுவதாக குறிப்பிட்ட மக்கள் இவற்றை மட்டும் வைத்துக்கொண்டு சமைக்க முடியுமா என கேள்வியெழுப்பினர். ஆரம்பத்தில் மரக்கறி வழங்கப்பட்டபோதும் தற்போது அவை வழங்கப்படுவதில்லை எனவும் அவர்கள் குறை பட்டுக்கொண்டனர். மீன் வாங்கவோ மரக்கறி வாங்கவோ மட்டு மன்றி தமது குழந்தைகளுக்கு பிஸ்கட் வாங்கிக் கொடுக்க கூட தம்மிடம் எவ்விதப் பணமும் இல்லை என அவர்கள் குறிப்பிட்டனர்.

ஊடக வியலவாளர்கள் ஒரு முறை மட்டும் வந்து விட்டுப் போனால் உண்மை நிலைமையை வெளிக்கொண்டுவர முடியாது அடிக்கடி நீங்கள் வரவேண்டும் எனவும் அவர்கள் வேதனையுடன் வேண்டிக் கொண்டனர் .

□

# பெண் மீன்களை என்ன பெயர் கொண்டு அழைப்பது

## அமைச்சர் கேள்வி ; எம்.பிக்கள் மௌனம்

(கொழும்பு)

மீன்களில் பெண் மீன்களை என்ன பெயர் கொண்டு அழைப்பது என்று கடற்றொழில் நீரியல் வளங்கள் அமைச்சர் பிலீக்ஸ் கேட்ட கேள்விக்கு எம்.பி.க்கள் எவருமே பதிலளிக்காது மௌனம் காத்தமையினால் சபையில் பெரும் சிரிப்பொலி எழுந்தது.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற வாய் மூல விடைக்கான கேள்விக்கான நேரத்தின் போதே அமைச்சர் பீலிக்ஸ் மேற்கண்டவாறு கேள்வியை எழுப்பினார்.

நன்னீர் மீன்பிடிக் கைத்தொழில் தொடர்பான ஜே.வி.பி. எம்.பியான பேமசிறி மானகே பல குறுக்குக் கேள்விகளை கேட்டிருந்தார். அதில் பல கேள்விகளுக்கு பதிலளிக்க அமைச்சர் திணறிக்கொண்டிருந்தார்.

இந்நிலையிலேயே தான் மீன்கள் மற்றும் மீன்களின் இனப்பெருக்கம் பற்றியும் இவ்வளவு பேசுகின்றீர்களே மீன்களில் பெண் மீன்க்ளை எவ்வாறு அழைப்பதென கூற முடியுமா? என அமைச்சர் கேள்வி கேட்டார்.

அமைச்சரின் இந்த கேள்விக்கு சம்பந்தப்பட்ட எம்.பிமட்டுமன்றி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எவருமே பதிலளிக்காது மௌனமாக இருந்தனர். இதனால் சபையில் சிரிப்பொலி எழுந்தது.

எனினும் கேள்விகளை கேட்டுக்கொண்டிருந்த உறுப்பினர் அக்கேள்விகளுக்கு பதிலளிப்பதற்கு கால அவகாசம் கோரினார். இதனால் சபையில் சிரிப்பொலி எழுந்தது. எனினும் அக்கேள்விக்கான பதிலை அமைச்சரும் கூறவில்லை. (ஓ-5)

## சரணடைந்தவர்கள் குடும்பத்துடன் இணைந்து வாழ அனுமதி

(கொழும்பு)

வன்னியில் படையினரிடம் சரணடைந்த 10 பேர் தங்கள் குடும்பங்களுடன் இணைவதற்கு அனுமதித்த வவுனியா மாவட்ட நீதிவான் அவர்கள் உறவினர்களுடன் நலன் புரி நிலையங்களில் வாழவும் அனுமதித்துள்ளார்.

கெங்காதரன் கேதீஸ்வரன், கெங்காதரன் ஸ்ரீதரன், அருண்யா இராஜயோகேஸ்வரன், சின்னத்துரை சதீஸ்குமார், பஞ்சாட்சரம் பார்த்திபன், சிவானந்தன் சிவாகரன், அருள்வாசகம் சசிதரன் ,சின்னத்துரை அமலநாதன், பரமானந்தன் வழிவேல், பேதுரு கமலாநாதன் ஆகியோருக்கே நீதிமன்றம் மேற்படி அனுமதியை வழங்கியுள்ளது. (ஓ-5)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## கலைப்பீடம்
## ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையம்

### இதழியல் டிப்ளோமா (முழுநேரம்) கற்கைநெறிக்கான அனுமதி -2009

க.பொ.த. (உயர்தர) தேர்வில் சித்தியடைந்த, பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கும் தகுதி பெற்றவர்களிடமிருந்து ஓராண்டு முழுநேர இதழியல் டிப்ளோமா கற்கைநெறி அனுமதிக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் படவுள்ளன.

**அனுமதிக்கான தெரிவு முறை**

(01) எழுத்துத் தேர்வு (எழுத்து ஆற்றல், அறிக்கையிடும் திறன், மொழியாற்றல், சமூக அறிவு)

(02) நேர்முகத்தேர்வு

| | | | |
|---|---|---|---|
| கட்டணங்கள் : | கற்கைநெறிக்கட்டணம் | ரூபா | 10, 000.00 |
| | பதிவுக் கட்டணம் | ரூபா | 750.00 |
| | நூலக வைப்புப்பணம் (மீளளிக்கத்தக்கது) | ரூபா | 1000.00 |
| | நூலக பயன்பாடு | ரூபா | 750.00 |
| | மொத்தம் | | 12, 500.00 |

**விண்ணப்பப் படிவங்கள்:**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக காசாளர் கருமபீடத்தில் அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக்கிளையில் ரூபா.100/ = செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டினைச் சமர்ப்பித்து விண்ணப்பப் படிவங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்படிவங்கள் யாவும் சிரேஷ்ட உதவிப் பதிவாளர், கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பப்படவேண்டும்.

**விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித்திகதி : 31.03.2009.**

**ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கத்தேவை இல்லை.**

(சி/2172)

பதிவாளர்
05.03.2009.

# துப்பாக்கிதாரிகள் தொடர்பாக தகவல் வழங்குவோருக்கு ஒரு கோடி ரூபா

## பாகிஸ்தான் அரசாங்கம் அறிவிப்பு

(லாகூர்)

இலங்கை கிரிக்கெட் வீரர்கள் பயணித்த பஸ்ஸின் மீது தாக்குதல் நடத்திய துப்பாக்கிதாரிகள் தொடர்பாக தகவல் வழங்குவோருக்கு ஒருகோடி ரூபா சன்மானமாக வழங்கப்படும் என பாகிஸ்தான் அரசு அறிவித்துள்ளது.

லாகூர் நகரில் வைத்து மேற்கொள்ளப்பட்ட இத் தாக்குதலுடன் தொடர்புடையதாகக் கூறப்படும் 12 தீவிரவாதிகள் பற்றிய தகவல்களை வழங்குபவர்களுக்கு இந்தப் பரிசுத் தொகை வழங்கப்படும்.

இதேவேளை, சம்பவம் இடம் பெற்ற பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் விடுதி ஒன்றில் தங்கியிருந்த 10 இளைஞர்களை லாகூர் பொலிஸார் கைது செய்துள்ளனர். பாகிஸ்தான் லாகூரில் கடாபி விளையாட்டு அரங்கம் முன்பு தீவிரவாதிகள் பொலிஸாருடன் சுமார் அரை மணி நேரம் தாக்குதலில் ஈடுபட்டனர். இதில் 6 இலங்கை கிரிக்கெட் வீரர்கள் காயம் அடைந்தனர். 5 பொலிஸார் உட்பட 8 பேர் பலியானார்கள்.

இந்த தாக்குதல் சம்பவத்தால் வெளிநாட்டவர் யாரும், பாகிஸ்தானுடன் நட்புறவு கொள்ள வரமாட்டார்கள் என்று லாகூரில் உள்ள பொது மக்கள் தெரிவிக்கின்றனர். அதனால் பாகிஸ்தானின் தொழில் வளர்ச்சி பாதிக்கப்படும் என்றும் அவர்கள் கூறியுள்ளனர். (ஓ-5)

## ஆப்கானிஸ்தான் தேர்தல்

(காபூல்)

ஆப்கானிஸ்தான் தேர்தலை அடுத்த மாதமே நடத்தும்படி தற்போதைய ஆப்கான் அதிபர் ஹமீத் கர்சாய் ஆணை பிறப்பித்திருந்தும்கூட, தேர்தல் எதிர்வரும் ஆகஸ்ட் மாதமே நடக்கும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.


தேர்தல் நியாயமாகவும் தலையீடுகள் இன்றியும் நடத்தப்படுவதை உறுதிப்படுத்தவும் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து நிர்வாகப் பிரச்சினைகளுக்காவும் ஆகஸ்ட் மாதத்திலேயே தேர்தலை வைத்திருப்பதாகவும் தேர்தல் ஆணையம் குறிப்பிட்டுள்ளது. (ஓ-6)

## சனியின் வளையத்தின் மறைவில் புதிய சந்திரன் கண்டுபிடிப்பு

சனிக்கிரகத்தின் வெளிவளையத்தின் மறைவில் புதிய சந்திரன் ஒன்று இருப்பதை கண்டறிந்துள்ளதாக சர்வதேச விண்வெளியியல் ஒன்றியம் செவ்வாய்க்கிழமை அறிவித்துள்ளது.

சர்வதேச கஸினி விண்கலத்தில் பொருத்தப்பட்டுள்ள தொலை நோக்கின் மூலமே இந்த சந்திரன் அவதானிக்கப்பட்டதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.

ஒரு மைலில் மூன்றில் ஒரு பாக அகலத்தை மட்டுமே இந்த சிறிய சந்திரன் கொண்டுள்ளதாகத் தெரிவித்த ஆராய்ச்சியாளர்கள் சனியின் வளையத்தில் மேலும் எண்ணற்ற மர்மங்கள் உள்ளதாக தாம் கருதுவதாகக் குறிப்பிட்டனர்.



சனிக்கிரகத்தைச் சுற்றி இதுவரை 60 க்கு மேற்பட்ட சந்திரன்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. (ஓ-5)

## சூடான் ஜனாதிபதிக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் பிடியாணை

சூடான் ஜனாதிபதி ஒமர் அல் பசீருக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் நேற்று முன்தினம் பிடியாணை பிறப்பித்துள்ளது. தர்பூர் பிராந்தியத்தில் யுத்தம் நடைபெற்ற காலத்தில் அங்குள்ள மக்கள் பிரிவொன்றின் மீது 9 வகையான மனிதாபிமானத்திற் கெதிரான போர்க் குற்றங்களை புரிந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் அவருக்கு இந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

உலக நாடுகளின் தலைவர் ஒருவருக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் இவ்வாறு பிடியாணை பிறப்பிப்பது இதுவே முதல் தடவையென்று தெரிவிக்கப்படுகின்றது.

தர்பூர் பிராந்தியத்தில் கொலை, கற்பழிப்பு, தற்காலிகமாக மக்களை வெளியேற்றுதல், சொத்துக்களை அபகரித்தமை, சித்திரவதை செய்தமை உள்ளிட்ட 7 மனுதாபிமானம் சார் குற்றங்கள், இரண்டு போர்க் குற்றங்கள் என்பன அல் பசீர் மீது சுமத்தப்பட்டுள்ளன.



இது தொடர்பான மனு நேற்று முன்தினம் சர்வதேச குற்றவியல் நீதிமன்ற விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதனைப் பரீசிலித்த மூவர் அடங்கிய நீதியரசர் குழு, சூடான் ஜனாதிபதி இன அழிப்பை மேற்கொண்டார் என்பதை உறுதிப்படுத்தப் போதுமான ஆதாரங்கள் மன்றில் முன்வைக்கப்படவில்லை எனத் தெரிவித்தனர். அத்துடன், ஏனைய குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பசீருக்கு பிடியாணையை பிறப்பித்துள்ளனர். (ஓ-5)

# வணிகத்தில் தகவல் தொழில்நுட்ப பிரயோகம்

(நேற்றைய தொடர்ச்சி)

இன்று பல துறைகளில் கணக்கீடு சார்ந்த மென்பொருட்களின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும். மேலும் கணக்கீட்டில் பயன்படுத்தப்படுகின்ற கணனி மென்பொருட்களில் முக்கியமானவையாக Quick Books Premier/por, peachtree, MYOB, Accpac, Executive, Payroll, Business Plan Professional, Marketing Builder, Tally, Ex etc... போன்றவை காணப்படுகின்றன.

மேலும் கணக்கீட்டில் Trail Balance, P&L Account, Balance Sheet போன்ற நிதி அறிக்கைகளை மிகவும் எளிமையான முறையில் விரைவாகத் தயாரித்து Printout எடுக்க முடிகின்றது.

மேலும் இருப்புக் கட்டுப்பாட்டிற்கு அடிப்படை தேவைகளான Stock item, Stock group போன்றவைகளைப் பராமரித்து Stock Summary மூலம் பொருட்களின் இருப்பு விகிதத்தை கண்டுபிடிக்கவும் உதவுகின்றது. எனவே இத்தகைய மென் பொருட்களினைப் பயன்படுத்துவதன் மூலம் விரைவாகவும், வினைத்திறனான வகையிலும் கணக்கீட்டு செயற்பாட்டினை மேற்கொள்ள முடிகின்றது.

வணிகப் புள்ளி விபரவியலில் பல்வேறு மென்பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன. அவற்றுள் SPSS (Statistical Package for Social Science) முக்கியமான ஒரு மென்பொருளாகக் காணப்படுகின்றது. ஆய்வில் தரவு வெளிப்படுத்தல் (Data Presentation) பகுப்பாய்வு (Analytical) போன்றவற்றிற்கு வசதியளிக்கின்றது.

உதாரணமாக ஒரு xyz என்ற நிதி நிறுவனத்தில் வழங்கப்படுகின்ற Reward Systems எவ்வாறு Employees Performance இல் தாக்கத்தினை செலுத்துகின்றது என நோக்குவோம். 20 மாதிரிகளினை தெரிவு செய்து தரவு சேகரிக்கின்ற பொழுது கீழ்வரும் அட்டவணை பெறப்படுகின்றது.

| Samples No | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| RS | 22 | 20 | 17 | 18 | 15 | 20 | 25 | 15 | 25 | 20 | 22 | 26 | 21 | 23 | 24 | 22 | 20 | 25 | 19 | 25 |
| EP | 28 | 26 | 23 | 20 | 18 | 24 | 28 | 20 | 22 | 25 | 26 | 28 | 26 | 20 | 26 | 23 | 20 | 27 | 24 | 30 |


RS - Reward Systems

EP - Employees Performance

1) இவ் ஆய்வில் Independent Variable - Reward System

Dependent Variable - Employees Performance ஆக காணப்படுகின்றன.

2) Scatter - Dot Graph இல் வரைபடம் பின்வருமாறு பெறப்படுகின்றது.




வரைபடத்தில் $R^2$ இன் பெறுமதி 46% மாக காணப்படுகின்றது. அதாவது இவ்வாய்வில் 54% மான பங்கு ஏனைய காரணிகளினால் நிர்ணயிக்கப்படுகின்றது என்ற முடிவிற்கு வருகின்றோம். இவ்வாறு பல்வேறுபட்ட பகுப்பாய்வு நுட்பங்களின் SPSS Package இன் ஊடாக அறிந்து கொள்ள முடிகின்றது.

இன்று பல்வேறு தகவல் முறைமைகளை (Information Systems) நிறுவனங்கள் அமுல்படுத்துகின்றன. இவற்றுள் ESS - Executive Support Systems, MIS Management Information Systems, DSS - Decision Support Systems, TPS - Transaction Processing Systems போன்றவற்றினை முக்கியமாகக் குறிப்பிடலாம்.

முகாமையினை உயர்மட்டம், நடுத்தர மட்டம், கீழ்மட்டம் என பிரிக்கின்ற பொழுது முறையே ESS உயர்மட்ட முகாமைக்கு உதவுவதாகவும், MIS, DSS ஆகியவை நடுத்தர மட்ட முகாமைக்கு உதவுவதாகவும் TPS ஆனது கீழ் மட்ட முகாமைக்கு உதவுவதாகவும் காணப்படுகின்றது.

உயர் மட்ட முகாமையானது தந்திரோபாய திட்டமிடலை (Strategic Decisions) நீண்ட காலத்திற்கு செயற்படுத்தக்கூடிய நோக்காகக் கொண்டது. நடுத்தர மட்ட முகாமையானது முகாமைத் தீர்மானங்களைக் கண்காணித்து அவற்றினைக் கட்டுப்படுத்துவதை (Monitor & Control) நோக்காகக் கொண்டுள்ளது.

கீழ் மட்ட முகாமைக்கு நாளாந்த செயற்பாடுகளை(Operational Activities) திறம்பட செயற்படுத்த வேண்டிய தேவையுள்ளது. இவ்வாறான முகாமைக் கட்டமைப்புகளை வினைத்திறனான வகையில் செயற்படுத்துவதற்கு தகவல் முறைமைகள் பேருதவி புரிகின்றன.

இன்றைய உலகம் இலத்திரனியல் வணிகமாக (Electonic Commerce) வளர்ச்சியடைந்துள்ளது. பல்வேறுபட்ட நவீன தொழில்நுட்பங்கள் விருத்தியடைந்து வருகின்றன. இன்று பல்கலைக்கழக கல்வி முறை பாராம்பரிய வணிகத்திலிருந்து (Traditional Commerce) நவீன தொழில் நுட்பங்களை கருத்திற் கொண்ட இலத்திரனியல் வணிகமாக (Electonic Commerce) மாற்றமடைந்துள்ளது என்பதனை எவரும் மறுக்க முடியாது.

இவ்வாறான மாற்றங்களால் மாணவன் எதிர்காலத்தில் தகவல் தொழில்நுட்ப உலகில் காலடி எடுத்து வைக்கும் அதேவேளை பல்வேறு சவால்களை எதிர்நோக்குகின்றான். என்னைப் பொறுத்தவரையில் மாற்றங்கள் என்பது உலகில் நிலையானது. வணிகத்தின் சவால்கள் தொடர்பாக London இல் அமைந்துள்ள பிரபலமான பல்கலைக்கழகத்துடன் Video Conference ஊடாக தொடர்பு கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் ஒன்று கிடைத்தது. அதில் தகவல் தொழில்நுட்ப மாற்றங்கள் தொடர்பாக எனது கருத்துக்களையும் தெரிவித்திருந்தேன். அத்துடன் புதிய விடயங்களையும் பெறக்கூடியதாகவிருந்தது.

இவ்வாறான ஓர் அனுபவத்தின் வாயிலாக சமூகத்திற்கு வணிகரீதியான தகவல் தொழில்நுட்ப மாற்றங்களை தெளிவுபடுத்துவதுடன் எமது துறைசார் வளர்ச்சியின் பங்கினை அறிந்திருத்தல் வேண்டும் என்பதில் ஆவல் கொண்டு இந்த ஆக்கத்தினை வரைந்துள்ளேன்.

2009 ஆம் ஆண்டு ஆங்கிலம், தகவல் தொழில் 'நுட்பம் தொடர்பான ஆண்டு. இவ்வாண்டில் எனதுதுறை சார்பாக பல்வேறு கருத்தரங்குகள், பட்டிமன்றங்கள் போன்றவற்றினை நிகழ்த்துவதற்கு நான் நடவடிக்கை எடுத்து வருகின்றேன்.

**திரு.க.க.அருள்வேல்**
தலைவர்
வணிகத்துறை
முகாமைக் கற்கைகள் வணிக பீடம்
யாழ். பல்கலைக்கழகம்

இவ்வாறான நிகழ்வுகளின் மூலம் தகவல் தொழில் நுட்பத்தில் ஆர்வமுள்ள ஒரு சமுதாயத்தை உருவாக்கலாம் என நினைக்கின்றேன். எனவே அனைவருக்கும் தகவல் தொழில் நுட்பத்தில் காலடி எடுத்து வைப்பதற்குரிய அத்திவாரமாக இவ்வாக்கம் திகழும் என்பது எனது நம்பிக்கை. (முற்றும்)

என் நாக்கு சத்தியம் செய்தது. ஆனால், என்னுள்ளம் அதைச் செய்யவில்லை.

- ஈரான்

வலம்புரி

# வன்னியில் பேரவலம் நடக்கும் போது ஊடகங்கள் பொறுப்பற்றிருப்பது ஏன்?

வன்னியில் பேரவலம் ஏற்பட்டுள்ளது. தினந்தோறும் மக்கள் பலியாகி வருகின்றனர்.

எதிர்வரும் நாட்களில் நிலைமை மோசமாகும் என ஐ.நாவும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் அபாய அறிவிப்பை விடுத்துள்ளன.

இந்த அபாய அறிவிப்பை எவரும் சாதாரணமாக கருதிவிடக் கூடாது. வன்னியில் நடக்கும் யுத்தத்தினால் தினந்தோறும் நூற்றுக்கு மேற்பட்ட மக்கள் பலியாகிக் கொண்டிருக்கும்போது, இலங்கையில் உள்ள ஊடகங்கள் அதுபற்றி எதுவித கவலையும் கருத்தும் தெரிவிக்காமல், பாகிஸ்தானில் காயமடைந்த இலங்கை கிரிக்கெட் வீரர்களை முன்னுரிமைப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளன.

எப்படி இருக்கிறது நிலைமை! எங்கள் நாட்டில் எங்கள் மக்கள் தினந்தோறும் உயிரிழந்து கொண்டிருக்கும்போது, கிரிக்கெட் வீரர்கள் காயமடைந்த செய்தி ஊடகங்களை ஆக்கிரமித்துக் கொண்டமை ஊடகங்களின் பொறுப்பற்ற தன்மையை வெளிப்படுத்துவதாகும்.

ஜனநாயகத்தின் நான்கு தூண்களில் ஊடகம் ஒன்று என்னும் தத்துவம் தோற்றுப் போய் வியாபார முயற்சியாக ஊடகத்துறை மாறியுள்ளமை வேதனைக்குரிய விடயமாகும்.

வன்னியில் யுத்தத்தால் பலியாகுவோரின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டிருக்கும்போது மறுபுறத்தில் பட்டினிச் சாவும் வன்னி மக்களை வதைக்கிறது.

பட்டினியால் ஏற்பட்டு வரும் மரணம் தொடர்பில் வன்னிப் பகுதி மருத்துவர்கள் அபாய எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த எச்சரிக்கைக்கு மேலாக ஐ.நா.சபையும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் இறுதியாக விடுத்த அறிக்கையில், வன்னியில் மிகப் பெரும் மனிதப் பேரவலம் இடம்பெறுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில், அந்த மக்களின் அவலங்களை நீக்க சகல ஊடகங்களும் முன்வரவேண்டும். தனியொரு மனிதனுக்கு உணவில்லையெனில் இந்த ஜெகத்தினையே அழித்திடுவோம் என்று முழங்கிய பாரதியின் பாடல் வரிகளை ஒருகணம் சிந்தையில் கொள்வது ஊடகங்கள் மறந்துபோன தமது தார்மீகக் கடமைகளை நினைவு படுத்துவதற்கு உதவுவதாக அமையும்.

மனிதப் பேரவலம் இடம்பெறும்போது அதனை தடுத்து நிறுத்துவதற்கு மாறாக அதனை பொருட்படுத்தாமல் அல்லது அதனை முக்கியத்துவப்படுத்தாமல் விடுவதன் விளைவை ஊடகங்கள் பொறுப்பேற்றாக வேண்டும் என்ற உண்மை மறப்பதற்கும் மறுப்பதற்கும் உரியதல்ல.

# சர்வதேசத்தின் கோரிக்கைக்கு அமைய அரசு யுத்த நிறுத்தத்துக்கு செல்ல வேண்டும்

## சபையில் சிவசக்தி ஆனந்தன் எம்.பி.கோரிக்கை

(கொழும்பு)

வன்னியில் மேற்கொள்ளப்பட்டு வரும் இராணுவ நடவடிக்கையால் இதுவரையில் 120 குழந்தைகள், 700 சிறு வர்கள் உட்பட 4 ஆயிரத்து 150 பொதுமக்கள் படு கொலை செய்யப்பட்டுள்ளதுடன் 6 ஆயிரத்து 750 பேர் படுகாயமடைந்துள்ளனர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி.சிவசக்தி ஆனந்தன் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற அவசரகால சட்ட நீடிப்பு பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எமது பிரதேசங்களில் தினமும் 50-100 என்ற அடிப்படையில் மக்கள் கொல்லப்படுகின்றனர். அத்துடன் 3 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் அவலநிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். அத்துடன் அங்கிருந்து இடம்பெயர்ந்து வந்தவர்கள் இன்று சிறைகளில் அடைக்கப்பட்டதைப்போன்று வைக்கப்பட்டுள்ளனர்.

வடக்கில் இடம்பெறுகின்ற படுகொலைகளை தடுக்கும் வகையில் ஐரோப்பிய ஒன்றியம் முதல் உலக நாடுகள் வரை யுத்த நிறுத்தம் கோருகின்ற போதிலும் அரசாங்கம் அதனை ஏற்பதாக இல்லை. நாளாந்தம் 5000-6000 வரையான ஷெல்கள் வன்னிக்குள் வீசப்படுகின்றன. இதனால் சிறுவர்கள் உட்பட பொதுமக்களும் கொல்லப்படுகின்றனர்.

இந்த யுத்தமானது தீராத, மாறாத வடுவாக மாறியுள்ளது. இந் நிலை யானது தமிழ் - சிங்கள உறவுக்கு பாரிய இடைவெளியை மாத்திரமே ஏற்படுத்தியிருக்கின்றது.

வவுனியா முகாம்களில் சிறைவைக்கப்பட்டுள்ள மக்கள் வெளியில் செல்லவிடாமலும் அதேவேளை, நோய்களுக்கும் ஆளாகியிருக்கின்றனர்.

முல்லைத்தீவு கிளிநொச்சி ஆகிய இடங்களில் 50 ஆயிரத்துக்கும் அதிகமான மாணவர்கள் கல்வியை இழந்து நிற்கின்றனர்.

அதேபோல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களின் கல்வி நிலையும் பாதிக்கப்பட்டுள்ளது. சுகாதார அதிகாரிகளைப் பொறுத்த வரையில் வவுனியா முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு எந்தவித நோயும் பரவியிருக்கவில்லை என்றும் கூறியிருக்கின்றனர். வன்னியில் இடம்பெற்று வருகின்ற தாக்குதல்களில் இது வரையில் 4 ஆயிரத்து 150 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 6 ஆயிரத்து 750 பேர் படுகாய மடைந்துள்ளனர்.

பலியானவர்களில் 120 குழந்தைகள், 700 சிறுவர்கள் மற்றும் 330 பாடசாலை மாணவர்களும் அடங்குகின்றனர். எனவே, இந்நிலை நீடிக்காது சர்வதேசத்தின் கோரிக்கைகளுக்கமைய யுத்த நிறுத்தம் ஒன்றுக்கு அரசாங்கம் செல்ல வேண்டும் என்றார். (ஓ-5)

# மனித உரிமை மீறல்களை தடுப்பதற்கு நரகத்திற்குச் சென்று போராடுவேன்

## என்கிறார் ஜெயலத் ஜயவர்த்தன எம்.பி.

(கொழும்பு)

மனித உரிமைகள் மீறப்படுவதாக அன்று ஜெனிவாவிற்கு சென்றவரின் ஆட்சியிலேயே இன்று மனித உரிமைகள் மீறப்படுகின்றது. மனித உரிமை மீறல்களைத் தடுப்பதற்கு ஜெனிவாவிற்கு மட்டுமல்ல, நரகத்திற்கும் சென்று போராடுவேன் என்று ஐ.தே.க. எம்.பி.யான ஜெயலத் ஜயவர்த்தன தெரிவித்தார். எனது செயற்பாட்டினால் அரசாங்கம் கோபமடைந்து என்னைப் பழிவாங்கினாலும் நான் பயப்படமாட்டேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிப்பதற்கான பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

உயிரிழந்த படையினரின் விதவை மனைவிகளுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட வில்லை, மருந்து பொருட்கள் இல்லை என்பதை நாம் சுட்டிக் காட்டியதை அடுத்து இந்தியா மருந்துப் பொருட்களை அனுப்பிவைத்துள்ளது. அமெரிக்காவும் அனுப்பியுள்ளது.

எமது கோரிக்கைக்கு இணங்கி மருந்து பொருட்களை அனுப்பிய இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளுக்கு ஐ. தே. க. நன்றியை தெரிவிக்கின்றது. ஹோம்ஸ் என்னதான் கூறினாலும் உண்மையான நிலைமையினை அறிந்திருப்பார்.

அரசாங்கத்திடம் என்ன? அரசியல் தீர்வு இருக்கின்றது. ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வை முன்வைத்தால் அதற்கு நாம் தயாராகவே இருக்கின்றோம் என்பதுடன் மனித உரிமை மீறல் தொடர்பில் அன்று பேசியவர்களின் இன்றைய ஆட்சியில் என்ன நடக்கின்றது. ஹெஜிங், மின்சாரம், தண்ணீர் கட்டணங்களை குறைக்கு மாறு நீதிமன்றம் சென்ற தேரருக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

படை வீரர்களுக்கு 80 வீதம் ஓய்வூதியம் வழங்கப்படுமென மஹிந்த சிந்தனையில் உறுதியளிக்கப்பட்டது. எனினும் அந்த உறுதி மொழி இன்னும் நிறைவேற்றப்படவில்லை.

யுத்த வெற்றிகளை நிரந்தர வெற்றிகளாக்குவதே இன்றுள்ள சவாலாகும். பிரச்சினைக்கு 13 ஆவது அரசியலமைப்பிற்கு அப்பால் சென்று தீர்வு காண்ப ற்கு தயார் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார். எனினும் இவ்வாறு செயற்படுவதற்கு அரசு தயாரில்லை என்பதையே காணமுடிகின்றது. வவுனியா வைத்தியசாலைக் கும் மன்னார் ஆயர் இல்லத்திற்கும் செல்வதற்கு பாதுகாப்பு இல்லை என்று எனக்கு அனுமதி மறுக்கப்படுகின்றது.

ஆனால் அமைச்சர் ரிசாத் பதியுதீன் அங்கு சென்று வருகின்றார். பரம்பரை பரம்பரையாக கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் வாழ்ந்த மக்களை அரசு வவுனியாவில் ஏன் குடியேற்றுகின்றது. பலாத்காரமாக மனச்சாட்சிக்கு விரோதமாக இக் குடியேற்றமிடம் பெறுகின்றது. வட கிழக்கை தவிர வேறு பல இடங்களில் தமிழ் மக்கள் வாழ்வதாக பிரதமர் கூறுகின்றார். உண்மை தான். ஆனால் அவர்கள் நிம்மதியாக வாழ்கின்றார்களா? பயத்துடனும் சந்தேகத்துடனும் தான் அவர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

மக்களுக்கு யுத்த மரண அச்சத்தை இந்த அரசு வழங்கக் கூடாது. தேசிய பிரச்சினையை தீர்க்க வேண்டிய உணர்வை வழங்க வேண்டும். அப்போது தான் நாட்டில் சமாதானம் ஏற்படும் என்றார். (ஓ-5)

# வெள்ளி நற்சிந்தனை 61

# பக்தியின் மொழி தமிழ்

மனித வாழ்வியலில் ஆடை இன்று அழகு நிலையில் இணைந்துள்ளது. 'ஆள்பாதி ஆடைபாதி' என்ற பழைய தொடரும் பயன்பாட்டில் உண்டு. ஒருவருடைய எடுப்பான தோற்றத்திற்கு ஆடை துணை செய்யும் என்ற நம்பிக்கையும் நிலவுகிறது. இந்த நம்பிக்கையை வழிபாட்டுநிலையிலே நோக்கும் போது பழைய காலத்தில் ஆடை எத்தகைய நிலையில் இருந்ததென்பதை ஊகித்துணரமுடிகின்றது.

இறைவனுடைய கோலத்தைப் பாடிய அடியவர்கள் இது பற்றிய குறிப்புகளைப் பதிவு செய்துள்ளனர். வயதில் இளமையும் அழகுத் தோற்றமும் கொண்ட சம்பந்தரது தேவாரப்பாடல்களில் கோலச் சிறப்புப் பற்றிய குறிப்புகள் அதிகமாக உள்ளன. பல தலங்களிலே உறையும் சிவனின் கோல அழகைப் பாடிய சம்பந்தர் அந்த அழகினைச் செந்தமிழ்ச் சொற்சித்திரங்களாக வரைந்து காட்டியுள்ளார். அவை மனத்தைக் கவரும் வண்ணம் கொண்டவை.

குளிர்மையான வயல்களால் சூழப்பட்ட 'திருப்பனந்தாள்' என்னும் தலம் காவிரியின் வட கரைத் தலங்களுள் ஒன்றாகும். கோயில் திருச்சுற்றில் பல பனைமரங்களுள. இக்கோயில் அர்ச்சகர் மகள் தாடகை என்பவள் வழிபட்ட லிங்கமும் அங்கு இருப்பதால் 'தாடகையீச்சரம்' என்ற பெயரும் இக்கோயிலுக்கு வழங்கப்படுகிறது.

அங்கு வீற்றிருக்கும் இறைவன் தோற்றத்தைச் சம்பந்தர் பாடும் போது இறைவனது ஆடை பற்றிய குறிப்பைச் சிறப்பாகக் குறிப்பிடுகிறார். இடையிலே புலித்தோலை அணிந்திருப்பதையும் அதன் மேல் புற்றரவை அணிந்திருப்பதையும் அத்துடன் கோவண ஆடை அணிந்திருப்பதையும் குறிப்பிட்டுள்ளார்.

கோவண ஆடை ஒரு எளிமையான தோற்றத்தைத் தருவது. மேலாடை என்ற நிலையில் புலித்தோல் காணப்படுகிறது. வெளியாகத் தோன்றும் மேனியெங்கும் வெண்ணீறு பூசப்பட்டுள்ளது. இறைவனுடைய இந்தக் கோல அழகு பார்ப்பவரை ஆடை பற்றி ஆய்வு செய்யத்தூண்டும்.

இராவணனுடைய வலிமையைத் திருமெல் விரலால் அடக்கிய சிவனின் ஆடை எடுப்பாக இல்லாமல் எளிமையாக இருப்பது சம்பந்தரைக் கவர்கிறது. அந்தக் கோலத்தைப்

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

பாடும் போது எமக்கு ஒரு செய்தியையும் தருகிறார். ஆடை என்பது மனிதனுடைய அழகைக்காட்டும் அணியல்ல. அவனுடைய குண இயல்பை வெளிப்படுத்திக் காட்டும் செயற்பாடு என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளார். குழந்தைப் பருவத்திலே சம்பந்தருக்கு சிவ தரிசனம் கிடைத்தமையால் அந்தக் கோலத்தை ஏனைய கோயில்களிலே உறையும் இறைவன் கோலத்தோடு ஒப்பிட்டு நோக்கும் தன்மை அவரிடம் மிக்கிருந்தது. இறைவன் கோலத்தை உன்னிப் பார்க்கும் பயிற்சியை எல்லோருக்கும் பாடலில் தருகிறார்.

*"செற்றரக்கன் வலியைத் திருமெல்விரலா லடர்த்து*
*முற்றும் வெண்ணீறணிந்த திருமேனியன்*
*மும்மையினான்*
*புற்றரவம் புலியின்னுரி தோலொடு கோவணமும்*
*தற்றவனூர் பனந் தாட்டிருத் தாடகையீச்சரமே"*

# இலங்கையில் தமிழ் மக்கள் அமைதியாக வாழவேண்டும்



## இயக்குனர் மணிவண்ணன்

(புதுக்கோட்டை)

இலங்கையை இரண்டாக்கி அதில் ஒன்றை விடுதலைப் புலிகளின் தலைவலவர் பிரபாகரன் கையில் கொடுக்க வேண்டும் என்பது ஆசையல்ல.

அங்கு தமிழ் மக்கள் அமைதியாகவும் ஒற்றுமையுடனும் வாழ வேண்டும் என்பதுதான் அனைவரினதும் எதிர்பார்ப்பு என்று திரைப்பட இயக்குனர் மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழர் படுகொலையைக் கண்டித்து புதுக்கோட்டை மாவட்டம் வடகாட்டில் தமிழ் ஈழ உணர்வாளர்கள் சார்பில் கண்டன பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறியுள்ளதாவது, இலங்கையில் இராணுவத் தளம், கருவிகள் மற்றும் அதிகாரிகளை அழியுங்கள். ஆனால் மிகவும் பின்தங்கிய குடும்பங்களை சேர்ந்த சிங்கள சிப்பாய்களைக் கொல்லாதீர்கள்.

விளை நிலங்களை சேதப்படுத்தாதீர்கள் என தாய் மண்ணை காப்பாற்ற பிரபாகரன் நாகரீகமாக போரினை நடத்துகிறார்.

இலங்கையில் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள் ஆட்சியின் முக்கிய பொறுப்புக்களை வகிக்கின்றனர். இதனால் அந்நாட்டு போருக்கு இறுதி வடிவம் கிடைக்கவில்லை.

புரட்சியாளர்கள் ஒருபோதும் ஆயுதங்களை ஆதரிக்கவில்லை. அவர்கள் ஆயுதத்தை கையில் எடுக்க கட்டாயப்படுத்துகிறார்கள்.

இந்நிலையில் தமிழ் மக்களுக்கு எதிராக செயல்படும் காங்கிரஸ் கட்சிக்கு எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் வாக்களிக்க மாட்டோம் என்று அனைவரும் சபதம் ஏற்க வேண்டும் என்றார். இயக்குனர் மணிவண்ணன். (ஓ-5)

# பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட வேண்டும்

## வீரப்பன் மனைவியிடம் மலைவாழ் மக்கள் கோரிக்கை

(மைசூர்)



எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் சந்தனக் கடத்தல் வீரப்பனின் மனைவி முத்துலட்சுமி போட்டியிட வேண்டும் என மலைவாழ் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். முத்து லட்சுமியை மைசூர் சிறையில் சந்தித்த போதே அவர்கள் இந்த கோரிக்கையை விடுத்துள்ளனர். சந்தனக் கடத்தல் வீரப்பன் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இதையடுத்து அவரது மனைவி முத்து லட்சுமி காட்டில் வாழ்வதை விட்டு நாட்டுக்கு வந்து தனது ஊரான மேட்டூரில் வசித்து வந்தார். இந் நிலையில் பழைய வழக்குகளை அடிப்படையாக வைத்து கர்நாடக பொலிஸார் முத்துலட்சுமியைக் கைது செய்து மைசூர் சிறையில் அடைத்தனர். பல முறை அவரது சட்டத்தரணி அவருக்கு பிணைமனு தாக்கல் செய்த போதிலும் அவருக்கு பிணை கிடைக்கவில்லை.

இந்நிலையில் மலைவாழ் மக்கள் பலரும் குடும்பத்துடன் சென்று அவரை சந்தித்து வருவதுடன் இவர்களில் சிலர் பாராளுமன்ற தேர்தலில் நிற்க வேண்டும் என முத்துலட்சுமியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஓ-5)

# அமெ. அதிபருக்கு இ-மெயில் அனுப்பக்கோரி பல்வேறு இடங்களிலும் தே.மு.தி.க பிரசாரம்

(அவினாசி)


இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண வலியுறுத்தி அமெரிக்க அதிபருக்கு இ-மெயில் அனுப்புமாறு தே.மு.தி.க. வினர் பிரசாரம் செய்து வருகின்றனர்.

இலங்கையில் உள்நாட்டு போரால், அப்பாவித் தமிழர்கள் பலியாகி வருகின்றனர். தமிழர்கள் மீதான இராணுவ தாக்குதல்களை தடுத்து நிறுத்தி, போர் நிறுத்தம் அறிவிக்கக் கோரி, அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா மற்றும் ஐ.நா. சபை பொதுச் செயலர் பான்-கி-மூன் ஆகியோருக்கு இ-மெயில் அனுப்புமாறு, அவினாசியில் தே.மு.தி.க.வினர் பிரசாரம் மேற்கொண்டு வருகின்றனர். இதை வலியுறுத்தி, அவினாசியில் பல்வேறு இடங்களில் பெரிய அளவிலான விளம்பர அட்டைகளை வைத்துள்ளனர்.

அந்த விளம்பர அட்டைகளில் " அப்பாவி தமிழர்களை கொன்று குவிக்கும் இலங்கை இராணுவத்தை உடனடியாக போர் நிறுத்தம் செய்ய வலியுறுத்தி, அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா மற்றும் ஐக்கிய நாடுகள் சபை பொதுச் செயலர் பான் -கி-மூன் ஆகியோருக்கு உலகின் ஒட்டு மொத்த தமிழர்களும், மின்னஞ்சல் (இ-மெயில்) அனுப்பி, நமது உணர் வலைகளை பதிவு செய்வோம். இவ்வண்ணம், விஜயகாந்த், தே.மு.தி.க, தலைவர் என்று குறிப்பிட்டு, அதன் கீழே அமெரிக்க அதிபர் மற்றும் ஐ. நா. பொதுச் செயலர் ஆகியோரது இ-மெயில் முகவரிகளும் கொடுக்கப்பட்டுள்ளன. (ஓ-5)

# ஈழத்தமிழருக்கு எதிரான கட்சிகள் தேர்தலில் வெற்றி பெற முடியாது

## விஜய டி.ராஜேந்தர்



(சென்னை)

இலங்கை தமிழர்களுக்கு எதிரான கட்சிகள், பாராளுமன்ற தேர்தலில் வெற்றி பெற முடியாது.

அதேநிலையில் இலங்கை தமிழர்களுக்காக குரல் கொடுத்தால், கைது செய்யப் படுவோம் என்ற பயமும் எனக்கு இல்லை என இயக்குநரும், லட்சிய தி.மு.க. தலைவருமான விஜய டி.ராஜேந்தர் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக கடந்த செவ்வாயன்று செய்தியாளர்களை சந்தித்து உரையாடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

இலங்கை தமிழர்களுக்கு எதிரான கட்சி காங்கிரஸ் .எனவே நடைபெற இருக்கும் பாராளுமன்ற தேர்தலில், காங்கிரஸ் கட்சியை தனிமைப்படுத்த வேண்டும். பாரா ளுமன்றத் தேர்தலில், நான் காங்கிரஸ் கட்சியை எதிர்த்து பிரசாரம் செய்வேன். காங்கிரஸ் அல்லாத கட்சிகளுடன் கூட்டணி வைத்துக் கொள்வோம்.

இலங்கைத் தமிழர்களுக்காக முத்துக்குமார் என்ற இளைஞன் தன் உடலில் செந்தீ வைத்துக்கொண்டு உயிர்த் தியாகம் செய்தான்.

அந்த சம்பவத்தில் இருந்து தமிழர்களின் இதயங்களில் இலங்கை தமிழர்களின் பிரச்சினை கொளுந்து விட்டு எரிய ஆரம்பித்து இருக்கிறது என்றார். (ஓ-5)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் ✠ 1957 ✠ 01 ✠ 21

ஆண்டவன் அடியில் ✠ 2008 ✠ 03 ✠ 06



ஈரவிழிகளில் கண்ணீர்சுமந்து
ஆண்டொன்று ஆனதுவோ!
தாங்க முடியுமோ!
தலைவிதி இதுவென
ஏங்கிட வைத்தனையோ! -அப்பா
வன்முறைகள் மலிந்திட்ட
எம் தாயக மண்ணில்... ஒன்று... இரண்டு..
உம் முறையும் வந்ததுவோ!
கலங்குகின்றோம்!
ஏனப்பா எம்மை இடைநடுவில்
தவிக்க விட்டீர்!
என்றும் உங்கள் நினைவுகளை,
கனவுகளைச் சுமந்து
கண்ணீர்த் துளிகளை
காணிக்கையாக்குகின்றோம்!
ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

அமரர்

கிட்டிணன் சிவநேசன்


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் வட மாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க சமாசம் மற்றும் பேரிணையத்தின் பொது முகாமையாளரும்.

என்றும் உங்களின் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள்.

கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

(2373)

# எண் விளையாட்டு-30




**போட்டிவிதிகள்:** மேலிருந்து கீழ் தொடங்கும் வெள்ளைக் கட்டங்களில் நிரப்பப்படும் எண்களின் கூட்டுத்தொகை, கட்டங்களின் மேல்புறத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்ணுக்கு சமமாக வர வேண்டும்.

இடமிருந்து வலமாக செல்லும் கட்டங்களுக்கும் இதே விதிதான். அக்கட்டங்களுக்கான கூட்டுத்தொகை இடப்புறம் கொடுக்கப்பட்டுள்ளது.

1 முதல் 9 வரையான எண்களை பயன்படுத்த வேண்டும். ஆனால் ஒரு வரிசையில் பயன்படுத்திய எண் திரும்ப வரக்கூடாது.

நேற்றைய பகுதிக்கான விடை



# மண்டைதீவு மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண உடனடி நடவடிக்கை

## வேலணை பிரதேசசெயலர் உறுதியளிப்பு

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு மக்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வை பெற்றுத்தருவதாக வேலணை பிரதேச செயலாளர் மு.நந்தகோபாலன் உறுதியளித்துள்ளார்.

நேற்றுக்காலை மண்டைதீவுக்கு விஜயம் செய்து அவர் அப்பகுதி மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை கேட்டறிந்து கொண்டதுடன் உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்துள்ளார்.

இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று மண்டைதீவு திருவெண்காடு சித்தி விநாயகர் ஆலயத்துக்கு அண்மையிலுள்ள மண்டபத்தில் இடம் பெற்றது. இதில் பெரும்தொகையான மக்கள் கலந்து கொண்டு தங்கள் பிரச்சினைகளை பிரதேச செயலரிடம் சுட்டிக்காட்டினர்.

பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் தலைமையிலான அதிகாரிகள் குழுவில் வேலணை பிர தேச செயலக திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் திருமதி மீரா திசநாயக்கம், பிரதேச கிராம அலுவலகர்கள் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதில் மின்சார வசதி, வைத்திய சாலை, தொலைத்தொடர்பு உட்பட பல பிரச்சினைக்கு உடன் தீர்வு காண்பதாக பிரதேச செயலாளரால் உறுதி அளிக்கப்பட்டுள்ளது. (ச)

# கப்பம் கோருபவர்கள் தொடர்பில் அறிவிக்கக் கோருகிறது இராணுவம்

(யாழ்ப்பாணம்)

கப்பம் கோருபவர்கள் தொடர்பில் உடனடியாக தமக்கு அறிவிக்குமாறு யாழ். இராணுவம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக இராணுவம் வெளியிட்ட செய்திகுறிப்பு வருமாறு.

யாழ் நகரில் உள்ள வர்த்தகர்கள், தொழில் செய்யும் உரிமையாளர்களிடம் இனம் தெரியாதோர் மிரட்டல் செய்து கப்பம் வேண்டுகிறார்கள்.

அத்துடன் அந்தக் கப்பப்பணத்தை பெறுவதற்காக வங்கி கணக்கு இலக்கத்தையும் அவர்கள் கொடுத்துள்ளார்கள்.

அப்படி மிரட்டல் உங்கள் யாருக்காவது வந்தால்

060 2214629,

021 2229968,

060 2219131 ஆகிய இலக்கங்களில் ஒன்றுக்கு தொடர்பு கொள்ளுங்கள். நீங்கள் எங்களுடன் தொடர்பு கொண்ட ஐந்து நிமிடத்தில் இராணுவமாகிய நாங்கள் உங்கள் அருகில் வந்து உதவுவோம்.

உங்கள் உடைமைகள், சொத்துக்கள், உயிர்கள் பாதுகாத்துக்கொள்வதற்கு இராணுவமாகிய நாங்கள் உங்களுடன் ஒத்துழைக்கின்றோம் என அவ் வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# வழிகாட்டல் கருத்தரங்கு

மெய்வல்லுநர் தொழில்நுட்ப அலுவலர் தரம் 4 பரீட்சைக்கான வழிகாட்டல் கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக யாழ். மாவட்ட மெய் வல்லுநர் தொழில் நுட்ப அலுவலர் சங்கச் செயலாளர் த.சிவசோதி அறிவித்துள்ளார். மெய்வல்லுநர் தொழில்நுட்ப தரம் 4 ற்கான பரீட்சை நாளை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# உதைபந்தாட்ட மத்தியஸ்தர் வகுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடத்தப்படும் உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான வகுப்புக்கள் நாளைக் காலை 10.30 மணிக்கு யாழ். குருசோர் வீதியிலுள்ள கிறீன் பீல்ட் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. புதிய உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களை உருவாக்கும் நோக்கில் நடைபெறும் இவ்வகுப்புக்களில் ஆர்வமுள்ளவர்கள் கலந்து கொள்ளலாம் 'என மத்தியஸ்தர் சங்க செயலாளர் கி.சுரேஷ் அறிவித்துள்ளார்.

இணைய விரும்புவோர் விண்ணப்பப்படிவத்தை பெற்று பூரணப்படுத்தி சமர்ப்பிக்குமாறும் இவ்வகுப்புக்களில் கடந்த வருடம் கலந்து கொண்டவர்களையும் ஏற்கனவே மத்தியஸ்தர்களாக கடமையாற்றியவர்களையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# மாசிமக இலட்ச அர்ச்சனை விஞ்ஞாபனம்

(மந்துவில்)

சாவகச்சேரி – நகர் அருள்மிகு அமிர் தபாஷினி சமேத சந்திரசேகரவாரி வணநாதர் சிவன் ஆலய மாசி மக இலட்சார்ச்சனை இன்று வெள்ளிக் கிழமை முதல் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை வரை நடைபெறும்.

மறு நாள் திங்கட்கிழமை காலை 7.00 மணிக்கு 108சங்காபிஷேகம் நடைபெற்று மகா யாக ஹோம பூசை, சுவாமி உள்வீதி உலா வருவதுடன் மாசிமக விழா நிறைவுறும்.

இதேவேளை நாட்டில் நிரந்தர சாந்தி சமாதானம் வேண்டி பூசை வழிபாடுகளும் இடம்பெறும் (ச-102)

# உள்நாட்டு போர் அனுபவம் எங்களுக்கு கைகொடுத்தது

## மஹேல ஜெயவர்த்தன கூறுகிறார்

(கொழும்பு)

தீவிரவாதிகளின் தாக்குதலை எதிர்கொள்வதற்கு இலங்கையின் உள்நாட்டுப் போர் அனுபவம் உதவியாக இருந்தது என்று மஹேலஜெயவர்த்தன கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் அதிகாலை நாடு திரும்பிய ஜெயவர்த்தன, செய்தியாளர்களிடம் பேசும் போது கூறியதாவது, தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு நாங்கள் பழகிவிட்டோம். துப்பாக்கிச் சூடு மற்றும் குண்டுவெடிப்பை அடிக்கடி பார்த்திருக்கிறோம்.

இந்த உள்நாட்டுப் போர் அனுபவம் எங்களுக்கு கைகொடுத்தது. அதனால்தான் தீவிரவாதிகள் சுடத் தொடங்கியதும் உடனடியாக சீற்றுக்களுக்கு அடியில் மறைந்து கொண்டோம். இதன்போது பஸ் சாரதி தனது உயிரையும் பொருட்படுத்தாமல் பஸ்ஸை தொடர்ந்து ஓட்டினார். இதனாலேயே எம்மால் உயிர் தப்ப முடிந்தது.

நான் பாதுகாப்பு குறித்த விசேட ஆய்வாளர் அல்ல. எனினும், ஒருநாள் தொடரை விடவும் டெஸ்ட் தொடருக்காக பாகிஸ்தான் பயணமானபோது பாதுகாப்பு குறித்து சிக்கல் இருந்ததாக தெரிந்தது. இது குறித்து கிரிக்கெட் நிர்வாகிகளே ஆய்வு செய்துமுடிபு எடுக்க வேண்டும். எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் நிகழக் கூடாது.

இந்தச் சம்பவத்திற்குப் பின்னர் வீரர்கள் மிகவும் அதிர்ச்சி அடைந்துள்ளனர். இது போன்ற தாக்குதல் சம்பவம் எங்கு வேண்டுமானாலும் நடைபெறலாம். இவ்வாறு அவர் கூறினார்.

# சுழல் நாயகன் முரளியின் சாதனைப் பயணம்...



25



பதிலுக்கு 50 ஓவர்களில் 201 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பாகிஸ்தான் அணி துடுப்பெடுத்தாடியது. எனினும் மழை குறுக்கீடு செய்தமையால் ஆட்டம் தடைப்பட்டது.

மீண்டும் ஆட்டம் ஆரம்பமாகியபோது பாகிஸ்தான் அணிக்கு வெற்றி இழக்காக 42 ஓவர்களில் 169 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது.

இதனடிப்படையில் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 30.2 ஓவர்களில் 1 விக்கெட்டை மாத்திரம் இழந்து 169 ஓட்டங்களை எடுத்து 9 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இதில் முரளிதரன் 4 ஓவர்கள் பந்துவீசி ஒரு ஓட்டமற்ற ஓவர் உட்பட 21 ஓட்டங்களைக் கொடுத்து ஆமீர் சொகலை (38) ஆட்டமிழப்பு செய்து விக்கெட்டை வீழ்த்தினார்.

இந்நிலையில் இரண்டாவது ஒருநாள் போட்டி 1994ஆம் ஆண்டு ஆகஸ்ட் 4ஆம் திகதி கொழும்பு ஆர்.பிரேமதாஸ விளையாட்டு அரங்கில் பகல் இரவு ஆட்டமாக நடைபெற்றது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 180 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதில் முரளிதரன் 10 ஓவர்கள் பந்துவீசி ஒரு ஓட்டமற்ற ஓவர் உட்பட 36 ஓட்டங்களை கொடுத்து வசீம் அக்ரமை (0) ஆட்டமிழப்பு செய்து ஒரு விக்கெட்டைவீழ்த்தினார்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 181 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 47.2 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 181 ஓட்டங்களை எடுத்து 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரைச் சமன் செய்தது.

(பயணிக்கும்)

# இலங்கை அணி வீரர்களை நாட்டுக்காக காப்பாற்றினேன்

## பஸ் சாரதி கலில் உருக்கம்

(லாகூர்)

"இலங்கை வீரர்களை ஆபத்திலிருந்து காப்பாற்றியது, பாகிஸ்தானுக்கு செய்த கடமை" என சாரதி மெகர் முகமதுகலில் உருக்கமாகத் தெரிவித்துள்ளார்.

இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்க இலங்கை அணி, பாகிஸ்தான் சென்றது. இதில் கராச்சியில்நடந்த முதல் டெஸ்ட் சமநிலையில் முடிந்தது. லாகூரில் இரண்டாவது டெஸ்ட் நடந்தது. இப் போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டத்திற்காக பஸ்ஸில் சென்ற இலங்கை வீரர்கள் மீது பாகிஸ்தான் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர்.

அப்போது பஸ் சாரதி மெகர் முகமதுகலில் திறமையாக பஸ்ஸை வேகமாக ஓட்டி அனைத்து வீரர்களையும் உயிர்ச் சேதமின்றி மீட்டார். அணித்தலைவர் ஜெயவர்த்தன, சமரவீர, மெண்டிஸ் உள்ளிட்ட எட்டுப் பேர் காயமடைந்தனர்.

இச்சம்பவம் குறித்து பஸ் சாரதி மெகர் முகமது கலில் கூறியதாவது, இலங்கை அணி வீரர்கள் எங்கள் நாட்டிற்கு வந்த விருந்தாளிகள். இவர்களது உயிரை காப்பாற்றியதை என் நாட்டுக்குச் செய்த கடமையாக கருதுகிறேன். இதன்மூலம் என் நாட்டின் பெருமைக்கு கடுகளவும் களங்கம் ஏற்படாது. நாங்கள் மைதானத்தின் அருகே வந்துகொண்டிருந்த போது எங்கள் பஸ் மீது சிலர் தாக்குதல் நடத்தினர். அப்போது இலங்கை அணி வீரர்களின் "கோ" "கோ" என்ற அலறல் மட்டும் எனக்குக் கேட்டது.

உடனே "ஆக்சிலேட்டரை" அழுத்தி வண்டியை வேகமாக ஓட்டினேன். இல்லையென்றால் "ரொக்கெட் லாஞ்சர்" எங்களை தாக்கியிருக்கும். தவிர வண்டி ரவுண்டானா வின் அருகே மெதுவாக திரும்பிய போது இரண்டு மர்ம நபர்கள் துப்பாக்கி தாக்குதல் நடத்தினர். இவர்கள் தொடர்ந்து தாக்குதலில் ஈடுபட்டனர்.

அப்போது ஒரு நபர் மட்டும் பஸ்ஸின் குறுக்கே குதித்து எறிகுண்டுகளை வீசத் தொடங்கினார். ஆனால் அதிர்ஷ்டவசமாக அது எங்களுக்கு சேதம் ஏற்படுத்தவில்லை. அப்போது வேகமாக பஸ்ஸை மைதானத் துக்குள் ஓட்டிச் சென்றேன். இவ்வாறு பஸ் சாரதி மெகர் முகமது கலில் கூறினார்.

வீரர்களின் உயிரைக் காப்பாற்றிய சாரதி மெகர் முகமது கலிலை பாராட்டி அணியின் ரி.சேட்டைக் கழற்றிக் கொடுத்துள்ளார் முத்தையா முரளிதரன்.

இதுகுறித்து இவர் கூறுகையில், "கலில் திறமையான பஸ் சாரதி. நான் இப்போது உங்களிடம் பேசிக் கொண்டிருக்கிறேன் என்றால், அதற்கு முழுக் காரணம் பஸ் சாரதி கலில் தான்" என்றார்.

மாநகர சபை, யாழ்ப்பாணம்.



# யாழ்தேவியின் யாழ்.பயணத்துக்காக 34 ரயில் நிலையங்கள் புனரமைப்பு

## அமைச்சர் டலஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணத்துக்கான யாழ்தேவி ரயில் சேவையை காங்கேசன்துறை வரை நடத்துவதற்கு ஒன்பது பிரதான ரயில் நிலையங்கள் உட்பட 34 ரயில் நிலையங்கள் புனரமைக்கப்படவுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

யாழ்தேவி ரயில் சேவைத் திட்டம் எதிர்வரும் 19ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் இது தொடர்பான நிகழ்வு அன்றைய தினம் மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளதுடன் இதனை முன்னெடுப்பதற்காக தேசிய செயலகமொன்றையும் ஜனாதிபதி ஆரம்பித்து வைப்பார்.

ரயில் பாதையை மீளமைப்பதற்கு நிதியுதவி வழங்க ஈரானிய அரசு முன்வந்துள்ளது. ஓமந்தையிலிருந்து யாழ்ப்பாணம் வரையிலான ரயில் பாதையை அமைப்பதற்காக தண்டவாளத்திற்கும், சிலிப்பர் கட்டைகளுக்குமாக 50 மில்லியன் அமெரிக்க டொலர் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

யாழ்தேவி ரயில் சேவைத் திட்டத்துக்கு அனைத்து தரப்பினரதும் உதவிகளைப் பெற்றுக் கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. மாகாணம் மற்றும் மாவட்ட ரீதியிலும் உதவிகள் பெற்றுக் கொள்ளப்படவுள்ளன. அதன்படி பல மாவட்டங்களிலுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் உதவி வழங்க ஏற்கனவே முன்வந்துள்ளன.

இத்திட்டத்துக்கு உதவ பொதுமக்களுக்கும் வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. அதன்படி விரும்புகின்றவர்கள் கொழும்பு கோட்டையிலிருந்து காங்கேசன்துறை வரைக்குமான ரயில் டிக்கட் ஒன்றை வாங்கி நிதியுதவி செய்யலாம்.

அவ்வாறு வாங்கப்படும் டிக்கட்டை ரயில் சேவை ஆரம்பித்த பின்னர் யாழ்.சென்றுவர பயன்படுத்தவும் வாய்ப்பளிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள யாழ்தேவி ரயிலை எதிர்வரும் ஏப்ரல் 23 ஆம் திகதி வவுனியாவுக்கும் அப்பால் தாண்டிக்குளம் வரை கொண்டு செல்லவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்தேவி யாழ்ப்பாணத்திற்கான தனது கன்னிப் பயணத்தை ஆரம்பித்த நாளான 1956 ஏப்ரல் 23 ஆம் திகதியை நினைவு கூரும் வகையில் இந்தத் திகதியில் அதன் பயணத்தை வவுனியாவுக்கும் அப்பால் கொண்டு செல்ல தீர்மானிக்கப்பட்டதாக அமைச்சு தெரிவிக்கின்றது. (ச-5)

## கிரிக்கெட் வீரர்களை புலிகள்...

மீதான தாக்குதலுடன் விடுதலைப் புலிகளுக்கு தொடர்பு இல்லை என உறுதியாகக் கூற முடியாது என வெளிவிவகார அமைச்சர் ரோகித போகொல்லாகம தெரிவித்துள்ளமை குறித்துக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது, இலங்கை கிரிக்கெட் வீரர்கள் பாகிஸ்தானில் பயங்கரவாதத் தாக்குதலுக்கு இலக்கானமை தொடர்பிலான விசாரணைகள் அந்நாட்டு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் பல விடயங்கள் முன்வைக்கப்படுகின்றன. விடுதலைப் புலிகள் இந்தத் தாக்குதலுடன் தொடர்பு பட்டிருக்கலாம் என பல முக்கிய கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

கிரிக்கெட் வீரர்கள் மீது தாக்குதல் மேற்கொண்ட குழுவினர் பயன்படுத்திய ஆயுதங்கள், அவர்களின் திட்டமிடல்கள் என்பன விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை ஒத்ததாக அமைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் விடுதலைப் புலிகள் பாகிஸ்தானில் எமது கிரிக்கெட் வீரர்களை பணயக் கைதிகளாக பிடித்துவைத்து இலங்கை அரசாங்கத்தால் வடக்கில் மேற்கொள்ளப்படும் தாக்குதல் நடவடிக்கைகளை நிறுத்துமாறு அழுத்தம் தெரிவிப்பதற்காக இவ்வாறான முயற்சியில் ஈடுபட்டிருக்கலாம்.

இந்தத் தாக்குதல் நடவடிக்கையுடன் தொடர்பு பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படும் லக்ஸர் இ தொய்பா அமைப்புக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் புலனாய்வுத் தொடர்புகள் இருக்கின்றன என்பதை நாம் வரலாற்றில் கண்டுள்ளோம்.

எனவே இவை அனைத்து விடயங்களை வைத்து பார்க்கும்போது பாகிஸ்தான் சம்பவத்துடன் விடுதலைப் புலிகளுக்கு தொடர்பு இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது என்றார். (ச-5)

## ஆசிரிய...

31ஆம் திகதியன்று மூன்று வருடங்களை பூர்த்தி செய்தவர்களே தேர்வு செய்யப்பட்டனர்.

தற்போது 2007ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதியன்று மூன்று வருடங்களை பூர்த்தி செய்த தொண்டர் ஆசிரியர்களுக்கு ஆசிரியர் உதவியாளர் பதவி வழங்கப்படவுள்ளதால் வடக்கு மாகாணத்தில் மேலும் பல தொண்டர் ஆசிரியர்கள் நன்மையடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (ச-5)

## புதுக்குடியிருப்பு சந்தியிலிரு...

படையினரால் மூன்று திசைகளினூடாகவும் சுற்றி வளைக்கப்பட்டுள்ளனர் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

இது தொடர்பில் இர்ராணுவப் பேச்சாளர் தொடர்ந்தும் கூறியதாவது, புதுக்குடியிருப்பு சந்தியை தமது முழுக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்துள்ள இராணுவத்தின் 58-வது படையணியினர் தற்போது அங்கிருந்து கிழக்கு நோக்கிய இராணுவ முன்னெடுப்புக்களை தீவிரப்படுத்தியுள்ளனர்.

இதன்போது புலிகளின் இலக்குகள் மீது படையினர் கடும் தாக்குதல்களையும் மேற்கொண்டனர். இந்தத் தாக்குதலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போது புலி உறுப்பினர்களின் 4 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

அத்துடன் ஆயுதங்கள் பலவும் கைப்பற்றப்பட்டுள்ளன. இதேவேளை புதுக்குடியிருப்பு சந்தியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தின் 8-வது விசேட படையணி மற்றும் 53-வது படையணியினர் மேற்கொண்டு வரும் முன் நகர்வு முயற்சியின்போது நந்திக்கடல் களப்பின் ஒரு பகுதியை படையினர் தமது முழுக்கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளனர்.

இந்நிலையில்புதுக்குடியிருப்பு மேற்குப் பகுதியில் அமைந்துள்ள புலிகளின் பிரதான பொலிஸ் நிலையம் கண்டுபிடிக் கப்பட்டுள்ளது என்றார். (ச-5)

## யாழ்ப்பாண நகரை ஒருங்...

தொடர்பாகவும் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

திருட்டுச் செயல்களை ஒழிப்பதும், பாதையில் ஏற்படும் விபத்துக்களை கட்டுப்படுத்தல், சட்டவிரோத மதுபானம் உற்பத்தி செய்தல், விற்பனை செய்தல். இதனால் ஏற்படும் வீண் பிரச்சினைகளை கட்டுப்படுத்துதல் மற்றும் வியாபாரிகளிடமிருந்து கப்பம் கோரல் என்பன தொடர்பாகவும் இக் கூட்டத்தில் கலந்து ஆலோசிக்கப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலின்போது பாதுகாப்பு சம்பந்தமான கட்டமைப்பு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதில் மேற்குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளை இல்லாதொழிக்க அல்லது கட்டுப்படுத்த அரசியல் கட்சிகள் ஊடாக மக்களுக்கு விழிப்புணர்வூட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இப்பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழுவானது மாதத்தில் ஒருமுறை நகர வட்டார கட்டளைத் தளபதி பிரிகேடியர் ஜே. ஆர்.குலதுங்கவின் தலைமைத்துவத்தின் கீழ் ஒன்று கூடுவதற்கும் முடிபுகள் எடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன் இக்குழுவானது தளபதியின் நேரடி கண்காணிப்பில் மேற்குறிப்பிட்ட செயற்பாடுகளை கண்காணித்து உரிய நடவடிக்கைகளை எடுக்கவுள்ளது என இராணுவம் தெரிவித்துள்ளது. (ச)

## லாகூர் தாக்குதலுக்குத்....

ஒலிபரப்பாளர் கேட்டபோது, அது உண்மையல்ல என திலீபன் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் அது தொடர்பாக கருத்துக் கூறவும் முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை முல்லைத்தீவில் 3 இலட்சத்து 50 ஆயிரம் மக்கள் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இருப்பதாக தெரிவித்த அவர், தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் முல்லைத்தீவில் மாத்தளன், பொக்கணை, முள்ளிவாய்க்கால் மற்றும் புதுமாத்தளன் ஆகிய கிராமங்கள் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

வன்னியில் பட்டினி காரணமாக இரண்டு சிறுவர்கள் பெண்கள் உட்பட்ட 11 பேர் மரணமானதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், அவருடைய மனைவி, பிள்ளைகள் அனைவரும் வன்னியிலேயே இருப்பதாக திலீபன் கூறினார் என அச் செய்திச் சேவை தெரிவித்துள்ளது. (எ-1)

## மாத்தளனில் ஷெல் தாக்கு...

சிதறல் பட்டதிலேயே தமது பணியாளர் உயிரிழந்துள்ளதாக தெரிவித்துள்ள அவர்,

சர்வதேச செஞ்சிலுவைக் குழுவின் பணிகள் அந்தப் பிரதேசத்தில் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும் என்றும் கூறினார்.

நோயாளர்களை ஏற்றி வருவதற்காக சென்ற இந்தக் கப்பலில் 170 மெற்றிக் தொன் மா,பருப்பு,சீனி, சமையல் எண்ணெய் உட்பட்ட அரசு மற்றும் உலக உணவுத்திட்டத்தின் நிவாரண உணவுப் பொருட்களையும் தாங்கள் இந்தக் கப்பல் மூலமாக புதுமாத்தளன் பகுதிக்கு செவ்வாய்க்கிழமை கொண்டு சென்றதாகவும் சரசி விஜயரட்ன தெரிவித்தார்.

புதுமாத்தளன் பகுதியில் இருந்து இதுவரையில் 8 தடவைகளில் காயமடைந்தவர்கள் நோயாளர்கள் மற்றும் அவர்களது உறவினர்கள் உட்பட 2 ஆயிரத்து 700 பேரை தாங்கள் கப்பல் மூலமாக திருகோணமலைக்கு கொண்டு சென்றிருப்பதாகவும் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவின் பேச்சாளர் சரசி விஜயரட்ன தெரிவித்தார்.

இந்தக் கப்பல் பயணத்திற்கு மோதல்களில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரும் அனுமதி வழங்கியிருப்பதுடன் கடல் பயணத்திற்கான பாதுகாப்பை கடற்படையினர் வழங்கி வருவதாகவும் அவர் கூறினார். (ச-5)

## இந்.இராணுவ...

அங்கிருந்து வாகனங்கள் மூலம் வடபகுதியிலுள்ள புல்மோட்டைக்குச் செல்லும் மருத்துவக் குழு அங்கு தற்காலிக மருத்துவமனையை அமைக்கிறது.

வடக்கில் இடம்பெற்றுவருகின்ற மோதல்களினால் காயமடையும் பொதுமக்களுக்கு மருத்துவ சேவைகளை வழங்குவதற்காக புல்மோட்டையில் புதிதாக நடமாடும் கள வைத்தியசாலை ஒன்றினை நிர்மாணிப்பதற்கு இந்தியா விருப்பம் தெரிவித்துள்ளது.

இவற்றுடன் அந்த கள வைத்தியசாலைக்கான 30 மில்லியன் இந்திய ரூபாய் பெறுமதியான மருத்துவப் பொருட்கள் அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மருந்துப் பொருட்கள் இந்திய விமானப் படைக்குச் சொந்தமான இரு விமானங்களின் மூலம் அனுப்பி வைக்கப்படவுள்ளன. (ச-5)

## போர் நிறுத்...

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

இலங்கையில் போர் நிறுத்தத்தை ஏற்படுத்த மத்திய அரசு இதுவரை எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்கவில்லை. மாநில அரசும் அதற்கு உறுதுணையாக இருந்து வருகிறது.

மத்திய, மாநில அரசைக் கண்டித்தும், இலங்கையில் உடனடியாக போர் நிறுத்தம் ஏற்பட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியும் வருகின்ற 10 ஆம் திகதி உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறும்.

இலங்கைத் தமிழர்களுக்கு நமது முழுமையான ஆதரவை வெளிப்படுத்துகின்ற வகையில் சென்னை மாநகரிலும், அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் மாபெரும் உண்ணாவிரத அறப்போராட்டம் நடக்கும்.

சென்னையில் நடைபெறும் உண்ணாவிரதப் போராட்டம் எனது தலைமையில் நடக்கும். மற்ற மாவட்டத் தலைநகரங்களில் நடைபெறவுள்ள உண்ணாவிரத அறப்போராட்டத்தில் தலைமைக் கழக நிர்வாகிகள் பங்கேற்பார்கள்.

ஒவ்வொரு மேடையிலும் இலங்கைத் தமிழர்களுக்காக நிதி திரட்ட உண்டியல் வைக்கப்படும். அதில் முதலில் எனது சார்பில் இலங்கைத் தமிழர்களுக்கு நிதியை அளிக்கவுள்ளேன்.

அந்தந்த மாவட்டங்களில் வைக்கப்படும் உண்டியலில் செலுத்தப்படும் நிதிகளை சம்பந்தப்பட்ட மாவட்டச் செயலாளர்கள்பின்னர் தலைமைக் கழகத்தில் ஒப்படைக்குமாறு பணித்துள்ளேன். இவ்வாறு அவர் கூறியுள்ளார். (ச-3,5,14)


வெளிவந்துவிட்டது

தரம் 11 இற்கான புதிய பாடத்திட்டம்

வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும்

உள்ளடக்கம்
பயிற்சியுடன் கூடிய விடைகள்
2008 Pass Paper விடையுடன்

ஆசிரியர்:- ஜெ.தமிழ்அழகன்
(B.Com (Acc. Spl), H.N. Dip in Acc)




கிடைக்கும் இடங்கள்: அனைத்து புத்தகசாலையிலும் (யாழ்.நகர், சுண்ணாகம், நெல்லியடி,பருத்தித்துறை, சாவகச்சேரி, சங்கானை, மானிப்பாய்)

(2380)

ஸ்ரீ அம்மா பகவான் சரணம்



ஸ்ரீ அம்மா பகவானின் மகா அவதார 60-வது ஜென்மதின விழா

காலம்:-நாளை (07.03.2009)சனிக்கிழமை
நேரம்:- பி.ப. 2.00 மணி -மாலை 6.00 மணி
இடம்:- யாழ் இந்து ஆரம்ப பாடசாலை

விசேட திரவியங்களுடன் பாதுகை அபிஷேகம் நடைபெறவுள்ளது. மக்கள் சுபிட்சமாக வாழவும், நாட்டில் சாந்தி சமாதானம் நிலவவும் வேண்டி அதி உன்னத ஆன்மீக விழா.

அனைத்து ஸ்ரீ அம்மா பகவான் பக்தர்கள் வருகைதந்து அனுக்கிரகத்தை பெற்றுய்யும் வண்ணம் வேண்டிக்கொள்கிறோம்.

8.3.2009 நல்லூர் முருகன் சன சமூக நிலையத்தில் ஸ்ரீ அம்மா பகவான் பாதுகை அபிஷேகம் நடைபெறும்.

ஸ்ரீ கல்கி ஆன்மீக மையம்,
மணியர்பதி லேன்,
கொக்குவில்.

தொ.பே:-021 222 2935 (C-2171)

பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில்
CIMA கற்கை நெறிகள் ஆரம்பம்
CIMA
Certificate Level
Sat,Sun 8.AM
Managerial Level
08.03.2009 Sun 1.PM
விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் நேரில்
MCS 324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
Supported By UNDP/JRRP
பரமேஸ்வரா சந்தி அருகில், Bus Root - 764

தகவல் தொழில் நுட்பத்தில் நீங்களும்
BIT



விஞ்ஞானமாணி தகவல் தொழில்நுட்பம்
Bachelor of Information Technology
External Degree Programme
University of Colombo School of Computing
புதிய கல்வியாண்டிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது
(A/L) எத்துறை சார்ந்த மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்
BIT பட்டமளிப்பில் சிறப்பு விருது பெற்ற நிறுவனம்
விண்ணப்படிவங்களிற்கும் பதிவுகளுக்கும்
MCS, 324, Palaly Road, Jaffna.
Supported by UNDP/JRRP


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.03.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.